# COUNTRY HERALD.

# கிராம தூதன்.

கௌரவ பத்திராதிபர்:

இரா. ந. நல்லகுற்றாலம் பிள்ளை, ஸ்ரீவில்லிபுத்தூர்.

1941 மார்ச்சு

மலர்-ந. இதழ்-ந.

## வாழ்க்கை முறை.

எளியோர்க்குப் பல தலைமுறைகளாகச் செய்யப்பட்டு வந்த கொடுமை, எல்லையின்றி வளர்ந்து விட்டது. இனித் தாங்கமுடியாது.

நமக்கு உழைத்தவர்கட்கு நாம் உழைத்தாக வேண்டும்; இதுவேமுறை. இம்முறைப்படி ஒழுகினுற்றான், எல்லா மக்களும்செவ்விதில்வாழலாம்; தவறினுல் துன்பம் வருவது திண்ணம். இதுவரை நமக்கு ஏழைகள் உழைத்துள்ளார்கள்; தொண்டு செய்திருக்கிறுர்கள். இனி நாம் அவர்கட்கு உழைக்கவேண்டிய முறையுண்டு.

அவர்களிடமிருந்துபெற்ற உதவிக்காக, நான் இயன்றவழிகளிலெல்லாம் அவர்கட்கு நன்மை செய்ய விருப்பங் கொண்டுள்ளேன். ... வெளியவர் வ... பெற் ...வர்கள் ...ர்த்தைப் ...ப என் ...

...தாக்கூர்.

ஆ
Y31m21195,N3191
N41.3.3
207583



சுழன்றும், ஏர்ப்பின்னது உலகம்—திருவள்ளுவர்.

## விசேடக் கட்டுரைகள்.

1. முதியோர் கல்வி
2. மாமரங்கள் வருடந்தோறும் காய்க்கச் செய்வதெப்படி?
3. சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழகஅறிக்கை
4. கல்வியும் கிராமாபிவிருத்தியும்
5. கூறுகெட்ட குப்பான்

(உட்பக்கம் பொருளடக்கம் பார்க்க)

பிரசுரகர்த்தர்:

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

# பொருளடக்கம்.

| எண் | பொருள் | பக்கம். |
| --- | --- | --- |
| 1. | கடவுள் வணக்கம் : பிரார்த்தனை .... ... | 65 |
| 2. | பொன்னுரைகள் : பொறுக்குமணிகள் ... ... | 66 |
| 3. | முதியோர் கல்வி ... ... | 67 |
| 4. | மாமரங்களை நிரந்தரமாகக் காய்க்கச் செய்வதெப்படி? ... ... | 69 |
| 5. | சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழக அறிக்கை VI ... ... | 73 |
| 6. | கல்வியும் கிராமாபிவிருத்தியும் III ... ... | 75 |
| 7. | சுகாதாரம் : குடும்பவாழ்க்கை | |
| | அ. நெல்லுச் சோறு II ... ... | 78 |
| | ஆ. நாட்டு வைத்தியம், மிருகவாகடம், பாகமுறை, சுகாதாரக் குறிப்புக்கள் ... | 80 |
| 8. | பயிரிடுபவரின் வறுமை I ... ... | 81 |
| 9. | கூறு கேட்ட குப்பான் IV-V .... .... | 84 |
| 10. | கண்ணாடி வளையல் ... .... | 86 |
| 11. | செய்தித் திரட்டு | |
| | அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள் ... ... | 87 |
| | ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள் ... ... | 88 |
| | இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள் .... ... | 89 |
| 12. | அறிவுரைத் திரட்டு | |
| | அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள் ... ... | 90 |
| | ஆ. கிராமப் புனருத்தாரண தேச முன்னேற்றக் குறிப்புக்கள் ... ... | 91 |
| | இ. இலக்கிய இலக்கண அருங்கலைப் போதனுமுறை ஆராய்ச்சிக் குறிப்புக்கள் ... | 92 |
| | ஈ. சிறந்த வாசகங்கள், செய்யுள்கள், அறஉரைகள், பழமொழிகள் ... ... | 93 |
| | ஏழை இந்தியா ... ... | 95 |
| | கால்நடைச் சந்தைகளும், விபசாயக் கண்காட்சிகளும் .... ... | 96 |

## மதிப்புரை

1. கட்டுரை வரைவியல் : ஆசிரியர் ஞா. தேவநேசன், 8, புத்தூர்மந்தை, திரிசிராப்பள்ளி ; இரண்டாம் பதிப்பு. 156 பக்கங்கள். விலை அணா 8.

இது மாணவ மாணவிகளுக்கு மட்டுமல்ல. இலக்கணமே கற்றிராதவருக்கும் அரைகுறையாகவே கற்றிருப்பவருக்கும் பெரிதும் பயன்படக்கூடும். இப்படியொரு நூலுமிருக்க, தமிழர் எவரேனும் தம் தாய்மொழியாம் தமிழில் தமக்குப் பிழையறப் பேசவும் வராது, எழுதவும் முடியாதென வெட்கமின்றிக் கூட்டங்களில் சொல்லிக்கொள்வதற்கும் நியாயமில்லை.

இப்பதிப்பிலும் பிழை திருத்தங்களிருப்பினும் (அதிகமில்லை ; இருபதுக்குள்ளாகவே யிருக்கின்றன.) அடுத்த பதிப்பேனும் பிழைகளின்றி வெளிவருமென்றும் தமிழர் மானம் காக்கப்படுமென்றும் நம்புகிறோம்.

2. சிறுவர் அறிவுக்கதிர் : மாதாந்தப் பத்திரிகை. பத்திராதிபர் திரு. வேதமுத்து, ஈரோடு. வருடச் சந்தா, உள்நாடு 12 அணா ; வெளிநாடு ரூ $1\frac{1}{2}$. சிறுவர் சிறுமிகளுக்கு வெகுவாய்ப் பயன்பட்டு வரும் பத்திரிகை. முதியோருக்கும் நல்லறிவு புகட்டும். அன்பர்கள் இதனை யாதரித்துப் பயனடைவார்களாக.

3. The Indian Journal of Adult Education : Editor Ranjite M. Chetsingh of the Friends' Settlement, Hoshangad, Central provinces. By-monthly Annual Subs cription Rs. 2—8—0.

முதியோர் கல்வியில் ஈடுபட்டுவரும் அங்கில அறிஞருக்குப் பெரிதும் பயன்படக்கூடிய பத்திரிகை.

# THE COUNTRY HERALD.

# கிராம தூதன்.

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை

0 MAR 194

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்".


இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், சீவில்லிபுத்தூர்.

| | | |
|---|---|---|
| மலர்: ௩ | 1941 மார்ச்சு-விக்கிரம, மாசி-பங்குனி | இதழ்: ௩ |


## 1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை.

வானவர்க்கு நின்னுடைய தூதருக்கு மறைதெளித்த
மற்றையோர்க்கு
மூனுடைய பல்லுயிர்க்கு முணர்வரிய பேரொளியா
யோங்கி நின்ற,
ஞானமென்னும் பரம்பொருளே யழியாத பெரும் பேறே
நடு நின்றென்று
மூனமற விளையாடி யெவ்விடத்து மெந்நாளு
முறையுங் கோவே.

உமறுப்புலவர்.

வானவர்க்கு(ம்) நின்னுடைய தூதருக்கு(ம்) மறை தெளித்த மற்றையோர்க்கும் ஊனுடைய பல்லுயிர்க்கும் உணர்வரிய பேரொளியாய் ஓங்கி நின்ற ஞானம் என்னும் பரம் பொருளே! அழியாத பெரும் பேறே! நடுநின்று என்றும் ஊனம் அற விளையாடி எவ்விடத்தும் எந்நாளும் உறையும் கோவே!

# 2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்.

1. அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்,
மறவாதிது கேள் : மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில் !

—மணிமேகலை.

2. மனோசுகத்திற்கு வழி இதுவே :— நடந்து போனதைப் பற்றிய துயரமும் வரப்போவதைப் பற்றிய கவலையும் விட்டு, நிகழும் காரியங்களில் மனம் திடபுத்தி தயை ஆகியவற்றை அறிவுடன் செலுத்தி வாழ்வை நடத்து; இயற்கையாக நடத்து; உன் பேச்சுக்களில் வீரமும் உண்மையும் பொருந்தியிருக்கட்டும். அப்பொழுது தான் சுகமாக இருப்பாய்; உன் மகிழ்ச்சிக்கும் எதனாலும் குறைவு நேராது. சத்திர வைத்தியன் எப்பொழுதும் தனக்கு வேண்டிய கருவிகளெல்லாவற்றையும் வேண்டிய நிமிடத்தில் உபயோகிக்கச் சித்தமாக வைத்திருப்பது போல, நீயும் தெய்வாதீன நிகழ்ச்சிகளும் மனிதர்களுடைய செய்கைகளும் உன்னைத் தாக்கியவுடன் அவற்றால் உனக்கு மனவேதனை உண்டாகாமல், அவற்றைச் சரிவர ஆராய்ந்து நடந்துகொள்ளுவதற்கு உனக்குதவக்கூடிய பேருண்மைகளை, உன் உள்ளத்தில் தயாராக வைத்துக் கொண்டிருக்கவேண்டும். அப்படிச் செய்வாயானால், எந்தச் சிறிய காரியத்திலும் உலகத்தில் மற்றவர்களுக்கும் உனக்குமுள்ள அழியாத அறப்பற்றை மறவாமல் நடந்து கொள்ளுவாய். பரம் பொருளைக் கருதாமல் உலக வாழ்வைச் சரிவர நடத்தமுடியாது.”

—மார்க்க அரேலியர்.

3. சீர்மலிந் தோங்குதே வாரத்தீம் பாலே
செப்பு புகழ்த்திரு வாசகத் தேனே
மாமலி யுந்திரு வாய்மொழிக் கண்டே
மற்றிவை போல்வநின் மாமுடி மணியே;
ஏர்மலிந் தோங்குதொல் காப்பிய நூலே
என்றுமி ளிர்ந்திடு மங்கல நாணே;
சேர்திரு வள்ளுவன் செப்புநல் லமிழ்தே
செம்முகச் சுட்டியாம் செந்தமிழ்த் தாயே!

—இரா. வெங்கடாசலம் பிள்ளை.

# முதியோர் கல்வி

"படித்தவர், முகத்திரண்டு கண்ணுடையவர்; படியாதவர் புண்ணுடையவர்" என்பது திருவள்ளுவரின் கருத்து. படியாதவர் கண்ணனது, குருட்டுக்கண்ணாக மட்டுமல்ல; புண்ணாகவுமிருக்கிறது. என்றாலும், ஊனக் கண்ணில்லாக் குருடர் பிறர் காணும் பொருள்களை அதிசயங்களைத் தாம் காண்பதற்கில்லையேயென்று விசாரமுற்றிருக்கின்றனர்; எழுத்தறிவில்லாக் குருடருக்கு, அத்தகைய விசாரமுமில்லை. அவருடைய அறியாமைப் புண்ணும் அவரை உறுத்துவதில்லை.

ஊனக்குருட்டை நீக்க மருந்து கண்டவரில்லை. என்றாலும், அந்தக் குருடருக்குத் தன் குருடு நீங்காதாவென்ற கவலையுமிருக்கிறது. நீங்கவேண்டுமென்ற ஆத்திரமுமிருக்கிறது. எழுத்தறிவில்லாக் குருட்டை நீக்கிவிடக்கூடும். ஆனால், இந்தக் குருடருக்கோ, அதை நீக்கிக் கொள்ளவேண்டுமென்ற ஆத்திரமில்லை.

எழுத்தறிவு ஒரு கருவியேயாயினும் அது எவருக்கும் இன்றியமையாத கருவியாகும். அக்கருவியைப் பெற்றிருப்பவர், தம் சௌகரியம்போலெல்லாம் தம் மறிவைப் பெருக்கி வரமுடியும். தம் அறிவைச் சதா பெருக்கிக் கொண்டிருப்பவருக்கே இவ்வுலகில் வாழ்வதற்கும் இடமுண்டு; அஃதில்லையேல் அவர் நல்வாழ்வு வாழ்தலும் கூடியதில்லை.

இந்நிலைமையில், இளைஞர் கல்வி அவசரமா? முதியோர் கல்வி அவசரமா? வென்று நம்மைக் கேட்பின், இளைஞர் கல்வியிலும் முதியோர் கல்வியே அதிக அவசரமென்போம். இளைஞர் கல்வியால், பல ஆண்டுகள் சென்றபிறகே, நாட்டிற்கு நலமுண்டாகக் கூடும்; முதியோர் கல்வியால் உடனுக்குடனேயும் பலன் கிடைக்கும்.

இது தவிர, கற்றிருக்கும் முதியோரே கல்வியின் அருமையை அறிவர்; அதன் அருமையையறிந்தவரே தம் குழந்தைகளின் சகோதர சகோதரிகளின் கல்வியிலும் சிரத்தையெடுத்துக் கொள்வர். முதியோர்கள் சிரத்தை யெடுத்துக் கொள்ளாதவரை இளைஞர் கல்வியும் வெகுவாக, சரியாகப் பரவக் கூடியதில்லை.

இதுவுந் தவிர, எழுத்தறிவினால் முதியோர் ஒழுக்கமுந் திருந்தக்கூடும்; வாழ்க்கைப் போக்கும் மாறக்கூடும்; வாழ்க்கையில் ஓர் ஆர்வமும் அவருக்குத் தோன்றக்கூடும்; விளக்கமும் நல்லோர் கூட்டுறவும் அமையக்கூடும். இப்படியாக அமைந்தாலன்றி, இளைஞர் அபிவிருத்திக்கு அத்தியாவசியமான சுற்றுப்புறமும் வாழ்க்கைத் திறமும் போக்கும், பள்ளிக் கல்வியினால் மட்டும் அமைந்துவிடக்கூடியதில்லை; ஆகவே, தற்கால இளைஞர்க்காக வேனும் முதியோரும் அவர் தம் பொருளாதார நிலைமையுந் திருந்தியாகவேண்டும். முதியோர் கல்வியும் வெறும் எழுத்தறிவுக் கல்வியாக நின்றுபோகாமல் அவரைப் பலவகையிலுஞ் செம்மைப் படுத்தவும் அவர் வறுமையைப் போக்கவும் உதவுங் கல்வியாகவு மிருக்க வேண்டும்.

வறுமையைப் போக்குவதற்கான மற்றும் வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவதற்கான யோசனைகளை நாம் பேசும் படக்காட்சி (Talkies), படம் பெருக்கி (Projectors), ஆகாயவாணி (Radio), பேசும் பெட்டி (Gramophone) முதலியவற்றின் மூலமாகத் தீவிரமாகவும் பரப்பலாம். அவற்றின் அரு

மையை முதியோர்கள் அறிந்தும் அவற்றைக் கையாண்டு நல்ல பலனை அடைந்தும் வரும் போது, அத்தகைய பிரசாரங்களில் அவர்கள் மென்மேலும் ஈடுபடுவார்கள். அத்தகைய பிரசாரங்களை நாம் வெகு விளக்கமாகச்செய்து வந்தபோதிலும், அவை சுருக்கமாகத்தானிருக்கமுடியும்; அவை பற்றிய புத்தகங்கள் பத்திரிகைகளைப்போல் அவ்வளவு விரிவாக இருக்க முடியா. இந்த நிலைமையில், அவர்களுக்கு அந்தப் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் அறிமுகப் படுத்துவோமாயின், அவற்றை வாசித்தறியவும் தெரியவேண்டுமென்ற அக்கறையும் அவர்களுக் கேற்படும். அப்பொழுது, எழுத்தறிவை அவர்களிடையே பரப்புவதற்கான முயற்சியைச் செய்வோமாயின், அந்த முயற்சியும் வெகுவாகப் பலிதமாகும். எழுத்தறிவினால் ஏதேனும் காரியமிருப்பதாகத் தெளிவாகத்தெரிந்தாலன்றி, முதியோர்கள் எழுத்தறிவியக்கத்தில் கலந்துகொள்ளவு மாட்டார்கள். அவர்கள் மனதோடு கலந்து கொள்ளாதவரை, பிறர் முயற்சிகளும் பலிதமாகா.

அரசாங்கமும் தலதாபனங்களும் மற்றும் பொதுத்தாபனங்களும் ஆலை முதலாளிகளும் தங்களின் கீழ் வேலை பார்க்கிறவர்களில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு, எழுதப் படிக்கத் தெரிந்தால் சம்பளம் கூட்டித்தரக் கூடுமென்றேனும் சொல்ல வேண்டும்; அல்லது பன்னிரண்டு மாதங்களுக்குள் படிக்கத் தெரிந்து கொண்டால்தான் சாதாரணச் சம்பளக் கூடுதலும் கொடுக்கக்கூடு மென்றேனும் சொல்ல வேண்டும். அவர்களுக்குச் சாவகாசமான நேரங்களில் படித்துக் கொள்ளுவதற்கான சௌகரியங்களும் செய்துதர வேண்டும். அரசாங்கம் சிறைக்கூடங்களிலும் ஆலை முதலாளிகள் தொழிற் சாலைகளிலும் அப்படிச் சௌகரியங்களை வேலை நேரத்திற்குள்ளாகவும் செய்துதரவேண்டும். அவ்வளவில், அவர்களெல்லாரும் எழுதப் படிக்கவுந் தெரிந்து கொள்ளுவார்கள்.

விபசாயிகள், விபசாயக் கூலிகள் ஆகியவர்களுக்காக ஏற்படுத்தும் முதியோர் கல்விச் சாலைகள் இவர்களுக்குச் சாவகாசம் அதிகமாக இருக்கக் கூடிய காலத்திலும் நெசவுகாரர்கள் மற்றும் கூலி வேலைக்காரர்களுக்காக ஏற்படுத்தும் சாலைகள் அவர்களுக்குச் சாவகாசம் அதிகமாக இருக்கக் கூடிய காலத்திலுமாக ஏற்படுத்தவேண்டும். அப்படிக்கில்லாது ஏற்படுத்தும் கல்விச் சாலைகளில் அவர்கள் அதிகமாகவும் கலந்துகொள்ள முடியாது. சாதாரணமாக, விபசாயிகளுக்குப் பங்குனி சித்திரை அறுப் படிப்புக்குப் பின் நாலைந்து மாதங்களும் நெசவு காரர்களுக்குத் தீபாவளிக்குப் பின் நாலைந்து மாதங்களும் சாவகாசம் ஏற்படலாம்.

முதியோர்கள் படிப்பதென்றால், தொடர்ந்து மூன்று நான்கு மாதங்களுக்குள் ஒரே தடவையாகப் படித்துவிடக் கூடியதாக இருந்தால்தான் படித்துக் கொள்ளக்கூடும்; அப்படி மூன்று நான்கு மாதங்களுக்குள் சாதாரணமாக எழுதப் படிக்கவும் படித்துக்கொள்ளலாம். அப்படிக்கின்றி, வருடம் பூராவும் படிக்கிறதென்றாலும் இடைவிட்டு வருடந்தோறும் சில மாதங்கள் படித்துவருவ தென்றாலும், அப்படிச் சரிவரப் படித்துவரவும் சாத்தியப்படாது; அப்படிக்கில்லாதபோது, கொஞ்சநஞ்சம் படித்ததும் பிரயோசனமில்லாது போய்விடும்.

இளைஞர்க்குதவும் புத்தகங்களும் முதியோர்க் குதவக்கூடியதில்லை. முதியோர்க்கெனச் சில புத்தகங்களும் வெளிவந்திருக்கின்றன; புதிது புதிதாகவுந் திருத்திவரப்படுகின்றன. (நாமும் ஒரு புத்தகம் இரண்டாண்டுகளாக எழுதி வருகிறோம்; சீக்கிரம் முடிவு பெறலாம்.)

முதியோரைத்தோழராகவேனும்கொண்டு கற்பித்து வருவதென்றால் மட்டும், அவர்கள் தொடர்ந்து படித்துவரக்கூடும்; சிறு பிள்ளைகளை நடத்திவருவதுபோல, அவர்களை நடத்த முடியாது. அப்படி நடத்தினால், அவர்கள்

அக்கறையும் குறைந்துபோகும்; படிக்க வர மாட்டார்கள். ஆகையால், முதியோர் போதனைக்கு விசேடத் தேர்ச்சியும் அதிகச் சாந்தமும் பெருந்தன்மையான போக்கும் வேண்டும்.

நம் நாட்டு ஆடவர்களில் 86 சதமானமும் பெண்டிரில் 97 சதமானமும் எழுத்தறியாதிருந்துவரும் நிலைமையில் அதனைப் போக்குவதற்குப்பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும் வேண்டும். அத்தொண்டர்களும் ஊதியமில்லாது உழைக்கக் கூடியவர்களாக இருந்தால் மட்டும், அவ்வெழுத்தறிவின்மையைநாம்விரைவாகவும் எளிதாகவும் போக்கிக்கொள்ள முடியும். இது காரியத்தில் பொதுநலத் தொண்டர்களும் கல்லூரி உயர்தரப் பள்ளி மாணவ மாணவிகளும் ஆசிரியர் ஆசிரியைகளும் கோடை விடுமுறை நாட்களில் அக்கறை எடுத்துக்கொள்ளுவதாயிருந்தால் கொஞ்சமேனும் பலிதமாகக்கூடும். இதில், நம் நாட்டினர் ஒவ்வொருவருக்கும் அக்கறை யிருக்கவேண்டும். நாம் அக்கறையாகச் செய்யுங் காரியங்களில், அரசாங்கமும் அக்கறை யெடாமலிருக்க முடியாது. அரசாங்கமும் அக்கறை யெடுக்கும் போது, இந்தக் காரியம் இன்னும் தீவிரமாகவும் திட்டமாகவும் பலிதமாகும்.

---

முதல் மலர் 54-56, 386-372ம் பக்கங்களையும் இரண்டாம் மலர் 40-42, 72-74, 123-128, 235-236, 265-269ம் பக்கங்களையும் பார்க்க.

---

**4. விபசாயம் :**

# மா மரங்களை நிரந்தரமாகக் காய்க்கச் செய்வதெப்படி?

LAL SINGH, B. Sc. (Hons) M. Sc. (Cales)and ABDUL AZIZKHAN B. Sc. (Agri) Ph. B. (Bris)

மாமரங்களில் வருடத்திற்கு இரு முறை கால நியதியின்றிக் காய்ப்பது, ஒவ்வொரு வருடமும் காய்ப்பது, ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் காய்ப்பதெனப் பலவகை இருந்து வருகின்றன. 1590 வருடத்தில் எய்னி-அக்பாரி (Aini-Akbari) எழுதிய அபுல்பசல் என்பவர் மாம்பழத்தைப் பற்றிச் சொல்லுகையில், சில மரங்கள் ஒருவருடத்தில் அபரிமிதமாகக் காய்த்து மறு வருடம் கொஞ்சமாகவே காய்க்கின்றனவென்றும் இன்னும் சில மரங்கள் ஒரு வருடத்தில் காய்த்தால் மறு வருடம் காய்ப்பதே யில்லை யென்றும் குறிப்பிட்டிருக்கிறார். இதைப் போலவே, 1913-ம் வருடத்தில் சகாரான்பூர் சர்க்கார் தோட்ட சூபரின்டென்டும், ஒவ்வொரு வருடமும் ஒரே மாதிரியாகக் காய்க்கக்கூடிய மாமரமுண்டெனக் கேள்விப்பட்டதே யில்லை யென்று சொல்லியிருக்கிறார். பர்ன்சும் பிரயாக்கும் 1908-ம் வருடமுதல் 1916-ம் வருடம்வரை மாமரத்தைப் பற்றிக் கணேற்கிண்டு தோட்டத்தில் எடுத்து வந்த குறிப்புக்களிலிருந்து, மாமரங்கள் ஒன்று விட்டு ஒரு வருடந்தான் நன்றாகக் காய்க்குமென்றும் இடையில் சொற்பமாய்த்தான் காய்க்குமென்றும் 1910-ம் வருடம் உறுதியாயிற்று. சாம்ராச்சிய விபசாய ஆராய்ச்சிச் சங்கம் இதை ஒரு முக்கியமான பிரச்சினையாகக் கருதி 1935வருடத்தில் பண்டிதர் பி. கே. சென் என்பவரை விசேடப் பயிற்சிக்காகத் தனது செலவில் இங்கிலாந்திற்கு அனுப்பிவைத்தது. இப்பொழுது அவர் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்து பீகாரில் சபூர் என்னுமிடத்தில் இதைப் பற்றி ஆராய்ச்சி நடத்திவருகிறார்.

### காய்க்கிற வருடம் காயில்லாத வருடம்

ஒன்று விட்டு ஒரு வருடம்தான் மாமரம் நன்றாகக் காய்க்கிறதென்றிருந்தால், பனி புயற் காற்று மழை ஆகியவற்றால் கால நிலை மாறு

பட்டாலொழிய, இந்த வருடம் நன்றாகக் காய்த்த மாமரம் அடுத்த வருடத்திற் கடுத்த வருடந்தான் நன்றாகக் காய்க்குமென்று திட்டமாகச் சொல்லி விடலாம். இந்தப் பிரச்சினை பழமரங்கள் வைத்துண்டுபண்ணுவோருக்கு நிரம்பவும் முக்கியமானது. நன்றாகக் காய்க்கும் வருடத்தில் பழக்கடையில் ஏராளமாகப் பழங்கள் வந்து குவிந்துவிடுவதால், மாந்தோப்புக்காரருக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. காய்ப்பில்லாத வருடத்தில் நல்ல விலை விற்கும்போது, விற்பதற்குப் பழங்கள் இருப்பதில்லை. ஆகையால், மாந்தோப்பிலிருந்து நல்ல இலாபம் கிடைக்க வேண்டுமென்றால், மாமரங்களை வருடமெல்லாம் நன்றாகக் காய்க்கும்படி செய்யவேண்டும். இதற்கு ஒவ்வொரு மரத்தின் வளர்ச்சியைப் பற்றியும் வெப்பதட்பத்திற்கேற்ப மாறும் அதன் குணவிசேடங்களைப் பற்றியும் நன்கறிந்துகொண்டு அம்மரத்தைச் சரியானபடி காய்க்கும்படி திருத்திக்கொள்ளவேண்டும்.

## மாமரத்தின் அசாதாரண குணம்

மாமரம் மற்ற மரங்களைப் போல வளர்வதில்லை. அது குறிப்பிட்ட காலத்தில்தான் வளரும்; தொடர்ச்சியாக வளருகிறதுமில்லை; அதாவது, சில காலம் வளர்ந்து சில காலம் வளராமலே சும்மாவிருந்துவிடும். துளிர்கள் சில சமையம் துளிர்க்கின்றன; பிறகு துளிர்க்காமலே நின்று விடுகின்றன. அதன் பிறகு திரும்பவும் துளிர்க்கின்றன. இப்படியேதான், மாமரத்தின் வளர்ச்சி. இம்மாதிரி சில காலத்திற்கொருதரம் வளர்வதைத் துளிர் விடுதல் (Flushes) என்பார்கள். ஒருவருடத்தில் ஒரு மரம் எத்தனை தரம் துளிர் விடுமென்பதும் எந்தெந்தத் தேதிகளில் துளிர் விடுமென்பதும், மாமரத்தின் வகை,வெப்பதட்ப நிலை பிரதேசம் பயிர்செய் முறை, மரத்தின் வயது, காய்ப்பு ஆகியவற்றையே பொறுத்திருக்கும். இலயால்பூரில் "இலங்கரா" வகை மாமரம் ஏப்பிரல் மாதம் முதல் ஆகஸ்டு மாதம்வரை ஒவ்வொரு மாதமும் தவருமல் துளிர்க்கிறது. இப்படியாக, ஒவ்வொரு பருவத்திலும் ஐந்து தடவை துளிர் விடும். ஒவ்வொரு துளிர் காலத்திலும் வளர்ச்சி விததியாசப்படும். சில வருடங்களில் அதிகமாகவும் சில வருடங்களில் கம்மியாகவுமிருக்கும். முந்திய துளிர் விடுங்காலத்தில் விட்ட துளிர்களின் முனையிலிருந்து பின் வெளியாகும் பூங்கொத்துக்களிலிருந்தே காய்கள் உண்டாகும்.

## ஏழுவருடப் பரிட்சை

பலவித வளர்ச்சிகளுக்கும் பழமுண்டாவதற்கு முள்ள சம்பந்தத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளவும் இரண்டுவருடத்திற் கொரு முறை காய்ப்பதற்குக் காரணமென்ன வென்பதைத் தெரிந்து கொள்ளவும் இலயால்பூரில் 1932-ம் வருடத்தில் ஒரு பரிட்சையை ஆரம்பித்து 1938 வருடம்வரை தொடர்ந்து செய்யப்பட்டது. அப்பரிட்சையில் கிடைத்த சில குறிப்புக்களிலிருந்து, பற்பலவிதமான வளர்ச்சிக்கும் அதற்கடுத்த வருடக் காய்ப்புக்கும் இரண்டு வருடங்களுக்கொரு முறை காய்ப்பதற்கும் காரணமென்ன வென்பதைப் பற்றிச் சில முக்கியமான விபரங்கள் கிடைத்தன. கைப்பக்குவத்தால் இதை நிவர்த்திக்க முடியுமென்று நம்பவும் அந்தப் பரிட்சை இடம் கொடுத்திருக்கிறது. இலயால்பூர் பஞ்சாப் விபசாயக் கல்லூரியில் ஒரே வளர்ச்சியும் பருமனுமுள்ள இரண்டு ஒட்டுக்கட்டப் பட்ட 'இலங்கரா' மாமரங்கள் பரிட்சை செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த இரு மரங்களிலும் முன் வருடத்திய கிளைகளில் வெவ்வேறு மாதங்களில் வளர்ந்த துளிர்களைப் பொறுக்கி யெடுத்துத் துளிர்கள் எந்தெந்த மாதத்தில் வளர்ந்தனவோ அந்த மாதத்தைக் குறிப்பிட்டு அடையாளம் செய்யப்பட்டது. இந்தத் துளிர்கள் சில வருடங்கள் கவனிக்கப்பட்டு வந்தன. ஒவ்வொரு வருடத்திலும் அவற்றின் வளர்ச்சியும் காய்ப்பும் எப்படி இருக்கிறதென்பதைத் தெரிவதற்

காகவே அவ்வாறு கவனிக்கப்பட்டது. சில கிளைகளில் விட்ட பூக்களைக் கிள்ளி எறிந்து விட்டு, அப்படிக் கிள்ளி எறியப்பட்ட கிளைகளின் வளர்ச்சியும் காய்ப்பும் பிந்திய வருடங்களில் எவ்வாறு இருக்கிறதென்பதும் கவனிக்கப்பட்டது. இப்படியாக ஏழு வருடத்தில் 1300 துளிர்கள் பரிட்சிக்கப்பட்டன.

## துளிர் உண்டாவதின் முக்கியம்

முதல் துளிர் ஏப்பிரல் மாதத்திலும் இரண்டாவது மே மாதத்திலும் மூன்றாவது ஜூன் மாதத்திலும் நான்காவது ஜூலை மாதத்திலும் கடைசி ஆகஸ்டு மாதத்திலும் உண்டாயிற்று. பொதுவாக ஏப்பிரல் மே ஜூன் மாதங்களிலேயே அதிகமாகத் துளிர்த்தன. பருவ கால ஆரம்பத்தில் ஏப்பிரல் மாதம் விட்ட துளிர்களிலிருந்தே, அடுத்த வருடம் அதிகமாகக் காய்த்தன. இதைப் போலவே, மே மாதத் துளிர்களில் ஜூன் மாதத் துளிர்களை விட அதிகமாகவும் ஜூன் மாதத் துளிர்களில் ஜூலை மாதத் துளிர்களைவிட அதிகமாகவும் ஜூலை மாதத் துளிர்களில் ஆகஸ்டு மாதத்துளிர்களைவிட அதிகமாகவும் இவ்வாறு படிப்படியாய்க் காய்த்தன. இந்த விபரங்களிலிருந்து மரத்தை வளர்ச்சி காலத்தின் முன் பாகத்திலேயே அதிகத் துளிர்விடும்படி தூண்டிவிடுவது முக்கியமென்பது வெளியாயிற்று. இப்படியாக அதிகத் துளிர் விடும்படி செய்ய, செய்முறைகளை மாற்றிக்கொள்ளவேண்டுமென்பதும் தெரிய வந்தது.

## துளிர் வளர்ச்சியைக் காலா காலத்தில் அதிகப் படுத்துவது

முன் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டதாகச் சொல்லிய துளிர்கள் எல்லாவற்றையும் அடையாளம் செய்து வளர்ச்சி காலம் ஆரம்ப முதல் முடிவுவரையில் அதாவது ஒரு வாரம் முதல் நான்கு வாரம்வரையில் குறிப்பிட்ட காலத்தில் பலவருடங்கள் கவனிக்கப்பட்டு வந்தன. ஒரே காலத்தில் வெளிவந்த துளிர்களாக இருந்தால் கூட, வளர்ச்சி நின்று போகும் காலம் ஒன்றாக இல்லையென்பது தெரியவந்தது. சிலவற்றின் வளர்ச்சி மற்றவற்றைக் காட்டிலும் நிரம்பவும் முந்தியே நின்று விட்டன. அடுத்த வருடம் இந்த ஒவ்வொரு துளிரின் காய்ப்பும் கவனிக்கப்பட்டது. முந்திய வருடத் துளிர் வளர்ச்சியின் வித்தியாசங்களுக்குத் தக்கபடி காய்ப்பும் இருந்தது. முந்திய வருடம் நிரம்பவும் துரிதமாகவும் வளர்ச்சி கால ஆரம்பத்திலேயே மற்றவற்றைக் காட்டிலும் அதிகமாகவும் வளர்ந்து, மற்றவற்றிற்கும் முன்னமேயே வளர்ச்சி நின்றுபோன துளிர்களே அதிகமாகக் காய்த்தன. முந்திய வருடத்தில் மெதுவாக வளர்ந்து வளர்ச்சிகாலக் கடைசிவரை வளர்ச்சி நிற்காமலிருந்த துளிர்கள் காய்க்கவேயில்லை. இவற்றிலிருந்து, துளிர் வளர்ச்சி முந்திய காலத்தில் முன் பாகத்திலேயே நின்றுவிடுவதற்கும் அடுத்த வருடம் காய்ப்பதற்கும் முக்கியமான சம்பந்தமிருப்பது தெரியவந்தது.

## துளிர்கள் மேற்கொண்டு வளராமல் நிற்பதேன்?

முந்தியே வளர்ச்சி நின்று போகும் துளிர்களில் அடுத்த வருடம் அதிகம் காய்ப்பதற்குக் காரணமென்னவென்றால், முந்திய காலத்திலேயே வளர்ச்சி ஆரம்பமாகும் துளிர்களில் முந்திய காலத்திலேயே அதிக இலைப் பாகம் உண்டாகிப் பருவகாலத்தில் அதிகப் காலம் ஊக்கத்துடன் இருக்கின்றன. காய்ப்புண்டாவதற்கு இந்த ஊக்கமே காரணம். இரண்டாவது முந்திய காலத்திலேயே வளர்ந்து வளர்ச்சி நின்று போகும் துளிர்களின் மரபாகம் கடினமாகவும் முதிர்ச்சியடைந்தும் விடுகிறது. காய்கள் உண்டாவதற்கு இது அவசியம். மழை அதிகமாகப் பெய்யக்கூடிய பிரதேசங்களில், அது பருவ காலத்தின் முந்திய பாகத்தில் செய்து நின்றுவிடும். மழைக்குப் பின் கிடைக்கும் நல்ல மகசூலுக்கு மேற்சொல்லியவைதான் காரணமென்று பொதுவாகச் சொல்லலாம். பருவ

மழை தொடர்ந்திருந்தால், துளிர்களின் வளர்ச்சியும் நிற்காமல் வெகு காலம் வரையில் தொடர்ந்து துளிர்களின் மரபாகம் இளமை யுடனும் முதிர்ச்சி யடையாமலு மிருந்து அடுத்த வருடத்தில் காய்ப்பில்லாமலேயே நின்று விடும். மற்றச் சில பழமரங்களிலுங் கூடப் பருவ காலத்தின் முந்திய பாகத்திலேயே மரத்துக்குச் சேத மில்லாமல் வளர்ச்சி நின்று விடும்படியாக எந்த வித முறையாவது அனுஷ்டிக்கப்பட்டால், அடுத்த வருடத்தில் நல்ல காய்ப்புண்டாகும். இலைப்பாகமும் அதிக மாகிக் காய்ப்பில்லாமலுமுள்ள மரங்களுக்கு வேர்களைக் கவாத்துச் செய்து அடிமரத்தைக் கொத்தி விடுவதால், காய்ப்பதிக மாகும். கொழுமையாக வளரக்கூடிய சில மரங்களின் முக்கிய வேர்களைக் கட்டையிடும்படி செய்தால், நல்ல பலன் கொடுக்கும்.

ஈரச் சத்துக்குக் குறைவில்லாத பட்சத்தில், காய்ச்சல் அதிகமாகவுள்ள கோடைக் காலத்துக்குப் பிந்திய வருடங்களிலும் நல்ல மகசூல் உண்டாகும். இந்தப் பழக்கங்களும் நிலைமைகளும் மற்றும் மரங்கள் சம்பந்தமாக வும், அவற்றின் தசைப் பாக வளர்ச்சியைக் குறைத்து அவற்றை முன்னதாகவே நிறுத்தி விடுவதென்றால், இதே மாதிரியான பலனையே தருகின்றன. எருவிடுதல் நீர்ப்பாசனம் கொத்து வெட்டு முதலிய வேலைகளின் முக்கியத்தையும் அவை எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பிட்ட வெப்பதட்ப நிலைமைகளுக்குத் தகுந்தவாறும் மற்றும் மரங்களின் காய்ப்புக்கும் இம்முறைகளை மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

### வளர்ச்சியும் காய்ப்பும்

ஒரு குறிப்பிட்ட துளிர் வருடாவருடம் எவ்விதமாகக் காய்க்கிற தென்பதைத் தெரிந்து கொள்ள அதே துளிர் வருடா வருடம் என்ன செய்கிறதென்பதைப் பல வருடங்களும் குறித்து வரப்பட்டது; முதலாவதாக, வளர்ச்சியும் காய்ப்பும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையென்றும் ஒன்று அதிகப்பட்டால் மற்றொன்று குறைந்து விடுகிறதென்றும் தெரிய வந்தது. இரண்டாவதாக, காய்க்கக் கூடிய துளிர்கள் பருவ காலத்தில் வளருவதே யில்லை; வளர்ந்தாலும் சொற்பமாகத்தான் வளர்ந்தன; ஆனால் காய்க்காத துளிர்கள் நிறைய வளர்ந்தன. முந்திய வருடம் பூத்த துளிர்கள் அடுத்த வருடத்தில் பூக்கவே யில்லை. அப்படிப் பூத்தாலும் நிரம்பவும் குறைந்த அளவிலேயே பூத்தன. மூன்றாவதாக, முந்திய வருடப் பருவ காலத்தின் முந்திய பாகத்திலேயே வளர்ச்சி நின்றுபோன துளிர்களே அடுத்த வருடம் பூத்தன. வளராமலேயே இருந்த துளிர்கள் பூக்கவேயில்லை. 'இலங்கரா' மா வகையில் ஒரு வருடம் ஆன துளிர்களிலேயே பூ உண்டாகின்றதென்றும் ஆகையால் ஒருவருடம் பூத்துக் காய்ப்பது அதன் முக்கியப் பருவகாலத்தில் உண்டாகிய துளிர்களைப் பொறுத்ததாகவே இருக்கிறதென்றும் தெரிய வந்தது.

ஆகையால், 'இலங்கரா' வகை மாமரம் இரண்டு வருடத்திற்கொருமுறை காய்ப்பதற்கு ஒரு வருடம் துளிர் வளர்ச்சியே யில்லாமல் போவதுதான் காரணமென்பது தெளிவாயிற்று. வயதாகாத பருவ வயதுள்ள மாமரங்கள் வருடாவருடம் காய்ப்பதற்குக் காய்களுடன் துளிர்களும் அதிகமாக விடுவதுதான் காரணமென்று ஒருவாறு சொல்லலாம். ஆகவே செய்முறையினால் ஒவ்வொரு வருடமும் காய்களுடனேயே போதுமான துளிர்களும் உண்டாகும்படி செய்தால், மாமரங்கள் இரண்டு வருடத்திற்கொரு முறைதான் காய்ப்பதென்ற பழக்கத்தை மாற்றி ஒவ்வொரு வருடமும் காய்த்திடும் மாமரங்கள் அதிகமாகவுள்ள பிரதேசத்தில் ஒரு வருடம் அபரிமிதமான மாங்காய்களும் ஒரு வருடம் மாங்காயே இல்லாமல் போவதற்கும் காரணத்தைக் கொஞ்சம் கவனிப்போம். சாதாரண நிலைமையில், இந்தப்படி நேருவதற்கில்லை; ஏனெனில், ஒரு பிரதேசத்திலுள்ள மாந்தோப்புகளெல்லாம் ஒரே வயதானவையல்ல. ஆகை

யால், இச்சம்பவம் மூடுபனி பூச்சிகள் நோய்கள் காய்க்க வேண்டியதாகவுள்ள துளிர்களையும் பூக்களையும் அழித்து விடுவதாலேயே ஏற்படுகிறது. இப்படிச் சேதமாய்ப்போன வருடத்தில், மரத்தின் ஊக்கமெல்லாம் துளிர் உற்பத்தியிலேயே செலவழிக்கப்பட்டு, அடுத்த வருடத்தில் மேற்சொல்லிய தொந்தரவுகளொன்றும் இல்லாத பட்சத்தில் நிறையக் காய்க்கின்றன. அவ்வருடத்தில் அடுத்த வருடத்திற்கு வேண்டிய துளிர் விடுகிறதில்லை. இப்படியாக ஒருவருடம் மாறிப்போன மாமரம் அடுத்த தடவை மேலே சொல்லிய உபத்திரவங்களால் பாதிக்கப்பட்டு மறுபடியும் மாறும் வரையில் ஒன்று விட்டு ஒரு வருடம் தான் திரமாகக் காய்த்துக் கொண்டு வரும்.

பூக்கோத்துகளைக் கிள்ளி எறிவது

பூக்கொத்துகளைக் கிள்ளி எறிவதால், அதே பருவ காலத்தில் அவை என்னவாகின்றன வென்றும் அடுத்த வருடத்தில் காய்ப்பு எப்படி இருக்கிறதென்றும் தெரிந்துகொள்ள வேண்டிச் சில துளிர்களிலிருந்து பூக் கொத்துக்கள் கிள்ளிஎறியப்பட்டு அக்கிளைகள் பிந்தியவருடங்களில் என்னவாகின்றன வென்று கவனிக்கப் பட்டன. பூக்கள் பிய்க்கப்பட்ட துளிர்கள் காய்க்காத மற்றத் துளிர்களைப்போல் அதே பருவகாலத்தில் வளர்ந்தன. பூக்கள் கிள்ளி எடுக்கப்பட்ட துளிர்களில் 100 க்கு 75 அடுத்த வருடம் நன்றாகக் காய்த்தன. காய்கள் முதிர விடப்பட்ட கிளைகள் அந்த வருடம் அதற்கு மேல் வளராததுடன் அடுத்தவருடம் காய்க்கவுமில்லை. பூக்களைக் கிள்ளிவிடுவதால் காய்ப்பை முறைப்படுத்தி விடலாமென்று இதிலிருந்து தெரியவந்தது. காய்ப்பு மிதமிஞ்சிப் போகும் போல் தோன்றுகிற வருடத்தில் பூக்களில் சிலவற்றைக் கிள்ளி எறிந்துவிட்டால் அந்த வருடத்தில் அவசியமில்லாத அதிகக் காய்ப்பையும் குறைத்துக்கொள்ளுவோம். அடுத்த வருடத்தில் காய்க்கக்கூடிய துளிர்கள் உண்டாவதற்கும் வழிசெய்து கொண்டவர்களாவோம். வயதான மாமரம் ஒருவருடம் அபரிமிதமாகக் காய்க்கும் பட்சத்தில் ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் காய்க்கும் பழக்கம் தான் அதற்குண்டாகும்.

"Indian Farming"

---

## 5. கூட்டுறவு :

# சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழக அறிக்கை VI

### கழக வேலை

கூட்டுறவில் சிறந்த நாடுகளைப் பற்றியும் நம் நாடு திருந்தவேண்டிய முறை பற்றியும் குறிப்பாக அக்டோபரில் எழுதினோம். கழக விசாரணையின் நோக்கமின்னதென் நவம்பரில் எழுதினோம். கூட்டுறவியக்கத்தை நம் நாட்டில் துவக்கிய காரணங்களையும் நோக்கங்களையுங் குறித்துப் பிற பிரசுரங்களில் கண்டபடி டிசம்பரில் எழுதினோம். கூட்டுறவுத் தகப்பனுக (Father of Indian Co-op movement) கருதப்படும். திரு. நிக்கல்சனுடைய அறிக்கையின் சாரத்தையும் சனவரியில் எழுதினோம். நம் மாகாண நிலைமையைப் பற்றி அறிக்கையில் கண்டபடி பிப்பிரவரியிலும் அரசாங்க ஆண்டறிக்கைகளில் கண்டபடி முதல் மலர் ஒன்பதாவது இதழிலும் இரண்டாம் மலர் ஐந்தாவது ஆறுவது இதழ்களிலும் எழுதியிருக்கிறோம். சென்ற ஆண்டறிக்கையும் இயக்க நிலைமையைத் திருப்திகரமாகச் சொல்லவில்லை.

இன்னும் குறுகிய காலக் கடன் அதிகமாகவுமில்லை; நீண்ட காலக் கடன் சுருங்கவுமில்லை. பாங்குகள் சங்கங்கள் ஏலத்திலெடுத்திருக்கும் நிலங்கள் கிரயமாகிக் கழிந்ததாகவுமில்லை. கடன் வாங்கியவர்களுக்கு எவ்வளவு தூரம் சௌகரியங்கள் செய்து வரக்கூடுமோ அவ்வளவு தூரம் சௌகரியங்கள் செய்தும் பாங்குகளின் இலாபம் குறைந்ததைத் தவிர்த்து அவர்களுடைய நிலைமை திருந்தியதாகவுமில்லை. கிராமச் சங்கங்களைச் சரியாக நடத்தி வருவதற்கான யோக்கியமும் திறமையும் நிறைந்தவர்கள் கிடைப்பதும் அரிதாகவே இருந்து வருகிறது. அப்படியிருப்பதால், விபசாய விருத்தி வேலைகளும் கிராமச் சேம இலாப வேலைகளும் நடப்பதும் இன்னும் சாத்தியமாக வில்லை. அரசியல் தேர்தல் கட்சிகளும் சுய நலங்களும் சங்கங்களைப் பாழாக்கி வருவதும் நிற்கவில்லை.

இந்த நிலைமையில், சுமார் ஒன்றரை வருடங்களாகக் கவனித்து அச்சில் ஐந்நூறு பக்கங்களுக்கும் மேற்படும் அறிக்கையில் எண்ணிட்டு முந்நூற்று நாற்பது சிபார்சுகளும் செய்திருக்கும் கழகத்தின் வேலையை நாம் திருப்திகரமெனப் போற்றுவதற்கில்லையென்றால், அதற்குப் போதிய காரணங்களிருக்கவேண்டும். அவற்றை வாசகர்கள் உய்த்துணரக் கீழே விவரிப்போம்.

### கிராமாந்தரக் கடன் சுமை

கூட்டுறவு முறையில் கிராமச் சேம இலாபத்திற்காகச் செய்யக் கூடிய யோசனைகளெல்லாம் கழகம் சிபார்சு செய்யலாமென்று அதன் நியமனப் பத்திரிகையில் (Terms of reference) கண்டிருப்பதைத் தவிர்த்துக் கிராமாந்திரக் கடன் சுமையை யொழிப்பதற்கான யோசனைகளும் கேட்பதாக அந்த நியமனப் பத்திரிகையிலேனும் அதற்கு முன் கூட்டுறவு இலாகா அதிகாரியின் மூலம் வெளிவந்த கேள்வித்தாளிலேனும் காணவில்லை. என்றாலும், கழக நியமனத்திற்கு முன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்தியிலும் (Press Communique) நியமனத்திற்குப் பின் கழகத்தின் வேலையைத் துவக்கி வைக்கும்போது கிரி மந்திரியார் பேசிய பேச்சிலும் கடன் சுமையை யொழிப்பதைப் பற்றிய குறிப்புக்களும் (The consolidation and strengthening of the co-operative financing system and its reorganization with a view to make co-operative banks and societies serve the needs of the Agricultural population more effectively than at present particlarly in regard to relief of indebtedness...........) வியக்தமாகக் காணப்படுகின்றன. நம் தமிழ் நாட்டுக் கூட்டுறவுத் தலைவர் செட்டியார் அவர்களைத் தவிர மற்றக் கழக உறுப்பினரெவரும் இந்த வியக்தமான குறிப்புக்களையும் சரியாக உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் தன் (dissenting minute) தனிக்குறிப்பில் (The Committee was appointed more for the purpose of advising low best to widen the scope of Co-operation and give it a new Orientation...... The Co-operative movement in India was started in the first instance to deal with the question of indebtedness...... So the main change in orientation should be to consider the economic life of the country side as a whole and not merely to concentrate attention on particular lines of business like banking...... This is a large programme but there is no way out of it.) விபசாயிகளின் கடன் நிவர்த்திக்காகவே இந்த இயக்கம் ஆதியில் துவக்கப்பட்டதென்றும் கிராமாந்திரப் பொருளாதார நிலைமையை மொத்தமாகக் கவனித்து இந்த இயக்கத்திற்குப் புத்துயிரளிக்க வேண்டுமென்றும் மற்றும் விபரமாயும் கண்டிருக்கிறார்கள். அவர்கள் கொண்ட கருத்தே மற்ற உறுப்பினர்களும் கொண்டிருப்பார்களாயின்

பிரயோசனகரமான சிபார்சுகளும் இந்தக் கழகம் செய்திருக்கக் கூடும்.

இப்பொழுது கடன் சுமை நிவர்த்தி பற்றி இந்தக்கழகம் செய்திருக்கும் சிபார்சுகள் பன்னிரண்டில் ஒன்று ஒத்தி நிலத்தை ஒத்தி வாங்கியவர் 25 வருடங்கள் அனுபவித்திருந் தால் அதனோடு ஒத்தி கழிந்ததாகக் கருதப் படவேண்டுமென்றும் இன்னொன்று இனி எந்த ஒத்திக்கடனும் 20 வருடங் களுக்குள் கழிந்து போகுமெனச் சட்டஞ் செய்யப்பட வேண்டுமென்றும் கிராமாந்திரக் கடனிறுக்க முடியாதவர் சட்டமொன்று செய்யப்பட வேண்டுமென்றும் விபசாயிகளின் வீடுகளையும் ஒரு குறைந்த அளவிற்கு அவர்களுடைய நிலங்களையும் கடனுக்காகச் சப்தி செய்யக்கூடா தென்றும் சிபார்சு செய்கின்றன. தபசில் வகுப் பினர்க்குச் சாரி செய்யப்படும் நிலங்களைப் பாக் கிக்காக அவர்களுடைய கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை ஏலம் போட்டுவரும் மாதிரியே இனி மேலும் ஏலம் போட்டு வரலாமென்றும் மற்ற நிலங்களைப் பராதீனம் செய்யக்கூடாதென்று தடுக்கவும் கூடாதென்றும் (Madras Debtors Protection Act)வட்டி தாரணையைக் குறைக்க வேண்டுமென்றும் கொடுக்கல் வாங்கல் செய்ப வர்கள் சம்பந்தமாகச் சட்டம் செய்யப்பட வேண்டுமென்றும் கடன் சமரசக் கழகம் நடைமுறைச் சம்பந்தமாகச் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் சிபார்சுசெய்யப் பட்டிருக்கிறது. இவை [illegible] செய்து முடிந்தாலும், [illegible] 200கோடி ரூபாவுக்கும் மேலிருப்பது எப்படி ஒழிந்து போகுமென்றும் புதுக்கடனுக்கு எப்படி அவசியமில்லாது போகுமென்றும் கடன் எப்படி வளராதிருக்கு மென்றும் நமக்குத் தெரியவில்லை; அறிக்கையிலும் இவை விளக் கப்படவில்லை. கடனின் உற்பத்திக்கும் வளர்ச் சிக்கும் மூல காரணங்களின்னதெனக்கண்டு அதனை வளர்வதற்கில்லாது தடுக்கப்படும் வரை அதனை ஒழிப்பதற்கில்லாத வரை கிராமாந்திர வாழ்க்கைக்குப் புத்துயிர் தான் எப்படி யளிக்க முடியும்? வியாதியின் மூலகாரணந் தெரிந்து அதனை நீக்கக்கூடிய மருந்து கொடுத்தால் வியாதி தீருமா? வெளிக் குறிகளுக்குச் (symptoms) சிகிச்சை செய்யுமளவிலேயே வியாதி தீர்ந்து போகுமா? ஒரு குறைந்த அளவிற்கு விபசாயிகளின் நிலங்களைச் சப்தி செய்யக் கூடாதென்றால், கூட்டுறவுச் சங்கங் கள் கொடுக்கும் கடன்களை வசூல் செய்வது தானெப்படி? கொடுத்த கடனை ஒரு குறைந்த அளவிற்குத் தான் வசூலிக்க முடியாது போகு மென்றாலும், இனி யெப்படிக் கடன்பெயரும்? விபசாயிகளுக்கு ஏகதேசம் கூட்டுறவுச் சங்கங் களில் கடன் கிடைக்கக் கூடிய தற்போதைய நிலைமையையும் இந்தக் குற்றுயிரையும் வாங்கி விடுவதுதான், அவர்களுக்குப் புத்துயிரளிப் பதா? என்பதையும் தெரிய விரும்புகிறோம்.

(தொடரும்.)

---

6. கல்வி:

# கல்வியும் கிராமாபிவிருத்தியும்

I. W. Moomaw M. Sc, Anklesvar

(சாரம் III)

பாடத்திட்டம்

முதல் ஆண்டில் வயல்களும் தோட்டங் களும் இரண்டாம் ஆண்டில் கிராமப் பறவை களும் மிருகங்களும் (பயிர்களில் விழும் புழுக் கள் பூச்சிகளைப் பற்றி அதிகமாகவும் தெரிய வேண்டும். ப-ர்) மூன்றாமாண்டில் வீடுகளும் நான்காமாண்டில் சுகாதாரமும் பொழுது போக்கும் ஐந்தாமாண்டில் அண்டை அயலா

ரும் அவர்கள் வாழ்க்கையுமெனப் பொது அறிவுப் பாடங்களைப் பிரித்து நடத்திவர வேண்டும். (ஒவ்வொரு ஆண்டிலும், இவற்றி லொவ்வொரு பாகம் நடத்தி வருவதே உசித மாகும். ப-ர்.)

கிராமத்தில் காணும் செடிகொடிகளைத் தானாக முளைப்பன வென்றும் பயிரிடுவதால் உண்டாவன வென்றும் பிரித்துக்கொள்ள வேண்டும். தானியப் பயிர்களென்றும் நார்ப் பயிர்களென்றும் தீவனப் பயிர்களென்றும் பூச்செடிகளென்றும் காய்கறிச் செடிகளென் றும் பழமரங்களென்றும் அவற்றைப் பிரித் துக் காட்டவும் வேண்டும். பிறகு அவற்றின் பொருளாதார முக்கியத்தை அனுசரித்துக் கிராமவாசிகளுக்கு உதவக்கூடியவற்றைப் பற்றி யெல்லாம் ஒன்றின் பின் ஒன்றாகச் சொல்லி வரவேண்டும். அப்படிச் சொல்லு கிற காலத்தில், அந்தந்தத் தானியங்கள் மற்றும் பயிர்கள் இவற்றின் விளைவு விபரங் களையும் கவனிக்கத் தூண்டவேண்டும். அவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பதற் குத் தக்கதாகச் சிறு சிறு விளம்பரப் பத்திரி கைகளையும் துண்டுப் பத்திரிகைகளையும் படிக் கவும் சொல்லவேண்டும். அவரவர்கள் வயதுக் கேற்ப அவற்றின் பயிர் செய் முறை பற்றி யோசிக்கவும் தூண்டவேண்டும். விதைகள் முளைப்பதெப்படி? பயிர்கள் வளர்வதெப்படி? என்பனவற்றைப் பற்றித் தெரியப் பிள்ளை களெல்லாருமேயேனும் ஒரு சில பிள்ளைகளே னும் ஈடுபடவேண்டும். ஒரு சில பிள்ளைகளே முக்கியமாக ஈடுபடுவதாயிருந்தாலும், மற்றவர் களும் அதில் கலந்துகொள்ளவேண்டும். இப்படிப் பரிட்சை பார்ப்பதெல்லாம் பள்ளிக் கூடத்தை ஒட்டியிருக்கும் தோட்டத்திலேயே செய்துபார்ப்பதாயிருக்கவேண்டும். பெரிய பிள்ளைகளாயிருந்தால், வீட்டிலும் செய்து பார்க்கச் சொல்லலாம். அந்தப் பையன்கள் வீட்டிற்கு ஆசிரியர் போகும் பொழுது அவர்கள் பயிரிட்டிருப்பது எப்படி இருக்கிற தென்றும் பார்த்து வரலாம். பள்ளிக்கூடத் தின் பக்கமாகப் பயிரிடுவதில், அவை அழகா யிருக்கும்படியாகவும் பயிரிடலாம். எங்குப் பயிரிடினும், பயிரிடு முன், என்ன பயிர் செய்யலாம்? அப்பயிரில் சிறந்த வகையெது? எப்படிச் செய்யலாம்? விதையை எப்படி ஊன்றலாம் என்றெல்லாம் பிள்ளைகளையே கேட்கவேண்டும். பிள்ளைகளுக்கு அவற்றை யெல்லாம் விளக்கியும் சொல்லவேண்டும். பயிரிடும் பாத்திகளுக்கு நான்கு பக்கமும் நடைபாதையும் போட்டுக்கொள்ளவேண்டும். உரம் ஏன் போடவேண்டும், எப்பொழுது அறுக்கவேண்டு மென்றெல்லாம் கேட்கவும் வேண்டும்; தெரியாததைச் சொல்லிவைக்கவும் வேண்டும்; பிசகாகச் சொன்னால், அதைத் திருத்தவும் வேண்டும். பெரிய பிள்ளைகளாக இருந்தால், அவர்கள் பார்ப்பதையெல்லாம் படமாகவும் வரையச்சொல்லலாம்; வரவு செலவுக் கணக்கும் வைத்துவரச் சொல்லலாம். பிள்ளைகளெவரும் இப்படி அக்கறை எடுத்து வரவேண்டுமென்றால், இந்தச் செடிகளெல் லாம் அவர்களுடைய செடிகளென்றே நினைக் கும்படியாக உணர்ச்சியையும் அவர்களுக்கு ஊட்டி வரவேண்டும். இந்த வேலைகளையும் பிள்ளைகள் ஒழுங்காகவும் சுத்தமாகவும் செய்து வரப் பழகவேண்டும். பாத்திகளைச் சுற்றிலும் வேலி போட்டுக்கொள்ளமுடியுமென்றால்தான், காவல் காத்து வரமுடியு மென்றால்தான் தானியப் பயிர்களைச் சாகுபடி செய்யலாம். விளைந்ததை எலிகளும் காகங்களும் கொண்டு போகும்படியாக விட்டுவிடுவதுகூடாது. வெடித்த பருத்தியைக் கீழே விழு முன்னதா கவே எடுத்துவிடவேண்டும். பூக்களைப் பறித்துப் பள்ளிக்கூடத்தில் உபயோகிக்க வேண்டும்; அல்லது பிள்ளைகளேனும் வீட் டிற்குக் கொண்டுபோகவேண்டும்.

காய்கறிகள் சுகத்திற்கு அவசியம் வேண் டும். தண்ணீர் இறைக்கவேண்டிய அவசியமில் லாமலும் வருடத்தில் ஆறுமாதகாலம் காய் கறிச் செடிகளைப் பயிரிடலாம். பிள்ளைகளையும் வீட்டை ஒட்டிக் காய்கறிச் செடிகள் உண்டு

பண்ணச் சொல்லலாம். அவற்றிலிருந்து வரும் வருமானத்தைக் காட்டிலும் அவர்களுக்கு அதனால் கிடைக்கும் அனுபவ அறிவு அவர்களுடைய பின் வாழ்க்கையிலும் அவர்களுக்கு மிகுந்த பயன் அளித்துவரும்.

கிராமங்களில் மரங்கள் வரவரக் குறைந்தே வருகின்றன. மரங்களிருந்தால் பார்க்கவும் அழகாயிருக்கும். மனிதனும் மாடும் வெய்யிலுக்கு அவற்றின் நிழலில் ஒதுங்கிக் கொள்ளவும் கூடும். ஊரும் குளிர்ச்சியாக இருக்கும். மரங்கள் ஈரத்தைக் காப்பதால் அவை மழை விட்ட பிறகும் செடிகளுக்கு ஈரம் உதவும்படி செய்யும். பழங்களும் விறகும் கட்டையும் மரங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும். மாமரங்கள், மாதளைச் செடிகள், எலுமிச்சஞ் செடிகள் முதலிய வற்றைச் சில வருடங்களே நாம் கவனிக்க வேண்டியதிருக்கும்; பின், பல வருடங்கள் அவை பலன்தரும்.

இதுவரை இருந்த மரங்களையும் வெட்டி வந்திருக்கிறோம். இனியேனும், பதில் மரங்கள் வைத்துவரவேண்டும். ஒவ்வொரு பையனையும் ஒவ்வொரு மரம் வைத்து வளர்த்து வரப் பழக்கவேண்டும். மரங்களை நடுவதற்கான வேலைகளையும் அவர்களையே செய்யச்சொல்ல வேண்டும். அவர்களுக்கு மரங்களை வளர்ப்பதில் ஆசையிருக்கும்; அக்கறையாகவும் அவர்கள் மரங்களை வளர்த்து வருவார்கள். மழைக் காலத்தில் பூச்செடிகள் வைக்க ஆரம்பித்தார்களென்றால், பின்னால் மலரும் ஏராளமான பூக்களையும் அவர்களையே பறித்து உபயோகித்துக் கொள்ளச் சொல்லலாம்.

விவசாயக் கல்வி வயிற்றுக்குச் சோறுபோடும் கல்வியென்பது மட்டுமல்ல; அது நம் வாழ்க்கையையே செம்மைப்படுத்தக் கூடிய கல்வியாகும். சிறு வயதில் பள்ளிக்கூடங்களில் அதைச் சொல்லிவைப்பதால், அவர்கள் தங்களுடைய பின் வாழ்க்கையிலும் உழைப்பைப் பெருமையாகவே கொள்ளுவார்கள். பள்ளிக்கூடம் இருக்கச் சௌகரியமாகவும் பார்க்க அழகாகவும் தோட்டவேலைகளால் அமைகிற மாதிரியே நாளடைவில் கிராமம் பூராவும் அமைந்துவிடும்.

நல்ல வீடென்றால், அதிகப் பணச்செலவு செய்து கட்டியவீடாகத் தானிருக்க வேண்டுமென்பதில்லை. வாழ்க்கைக்குச் சௌகரியமாகக் கட்டிய வீடேயாகும். அந்த வீட்டில் வாழ்கிறவர்களும் ஒருவரையொருவர் அன்பாகவும் மரியாதையுடனும் நடத்திவர வேண்டும்.

பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு எந்தத் தொழில் கற்பித்துக் கொடுத்தாலும், அது அவர்களுக்கு வீட்டிலும் பின் வாழ்க்கையிலும் உதவக் கூடியதாக இருக்கவேண்டும். அவர்களுக்குப் படிக்கும் பழக்கமும் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறு முன்னதாகவே கைவர வேண்டும். பள்ளிக்கூடங்களில் அவர்களிடம் நல்ல புத்தகங்களைக் கொடுத்து அவற்றைப் படிக்கத் தூண்டவேண்டும். ஆசிரியர்களின் திறமைக்கும் குணத்திற்கும் தக்கதாகவே பிள்ளைகளின் திறமையும் குணமும் அமையும்.

சுருங்கச் சொல்லில், கிராமத்தில் கற்பிக்கப் படும் எதொரு கல்வியும் கிராமத்தின் அபிவிருத்திக்கு முதவுவதாக இருக்கவேண்டும்.

## 7. அ. சுகாதாரம்: குடும்ப வாழ்க்கை

# நெல்லுச் சோறு

Health Bulletin No, 28. (Summary)

## II

### அரிசியின் சத்து

கோதுமையில் பிசிதம் ஏராளமாக இருக்க, 100 கிரெடை அரிசியில் 6-7 கிரெடை பிசிதமேயிருக்கிறது; ஆனால், அரிசியிலுள்ள பிசிதம் நம்முடலோடு சேருவதற்கு அதிக வசதியுமுடையதாக இருக்கிறது. (High-Biological Vale) ஆகையால், அரிசியின் பிசிதக்குறைவை, அத்தனை முக்கியக் குறைவாகச் சொல்லுவதற்கில்லை. மற்றும் தானியங்களைப் போலவே அரிசியிலும் கொழுப்புச் சத்துக் குறைவாக இருக்கிறது. ஒருவருக்கு நித்தம் 60 கிரெடை கொழுப்பு வேண்டியதாக இருப்பதில் 20 கிரெடைக் கொழுப்பே அரிசியிலிருந்து கிடைக்கக் கூடும். ஏ உயிர்ச்சத்தும் வேண்டிய அளவு அரிசியிலிருப்பதே இல்லை; அதனால் கண்பார்வைக்கும் கேடு நேரலாம். அரிசியில் சுதையமும் (Calcium) குறைவாகவே யிருக்கிறது. நமக்கு வேண்டிய சுதையத்தில் பத்திலொரு பங்கே அரிசியிலிருந்து கிடைக்கும். அரிசியில் இரும்பும் குறைவாகவே யிருக்கிறது. கைக்குத்தரிசியிலிருப்பதைக் காட்டிலும் ஆலையரைவை அரிசியில் எரியம் (Phosphorus) அரைவாசி குறைவாகவே யிருக்கிறது. கைக்குத்தரிசியிலுள்ள பி உயிர்ச் சத்தளவு ஆலையரைவை அரிசியிலிருப்பதில்லை. பத்து லட்சத்தில் 4 பாகம் பி, உயிர்ச்சத்தாகக் கைக்குத்தரிசியிலிருந்தால், ஆலையில் ஒருதடவை அரைத்த அரிசியில் 1·8 பாகமும் இரண்டு தடவை அரைத்த அரிசியில் 1பாகமும் மூன்றுதடவை அரைத்த அரிசியில் ·7 பாகமுமே இருக்கிறது. அவித்த நெல்லை மூன்றுதடவை அரைத்த போதிலும், அதில் 2 அல்லது 2½ பாகம் பி, உயிர்ச்சத்து நிலைக்கிறது.

### கழுவுதலும் சமைத்தலும்

உணவுச் சத்துக்களனேகம் தண்ணீரில் கரையக்கூடியன. அரிசியைப் பலதடவை கழுவுவதால் அனேக சத்துக்கள் கழிந்து விடுகின்றன. அரிசியை மூன்றுதடவை கழுவிக் கழுநீரைக்களைந்து தண்ணீரும் தாராளமாக வைத்து வடித்தால் இரும்பில் 75 சதமானமும் எரியத்தில் 50 சதமானமும் பி, பி-2 உயிர்ச் சத்துக்களும் கழிந்துபோகும். முதல் தடவை கழுவுவதிலேயே அனேகம் கழிந்து போகும். கழுநீரோடு கழிகிற அளவு வடிகஞ்சியில் கழிவதில்லை. அளவாகத் தண்ணீர் விட்டுப் பொங்குவதாயிருந்தால், சமையலால் கழிவதும் வெகுவாகக் குறைந்துபோகும். ஆகையால், சாதாரணமாக நினைக்கிற மாதிரி சமையலினால் அதிகம் கெடுவதாகச் சொல்லுவதற்கில்லை; (கழுநீரை வேறு கறிகள் சமைப்பதற்கு உபயோகிப்பதாயிருந்தால் சோற்றில் குறைந்த சத்துக்களும் அந்தக் கறிகளில் கூடிக்கொள்ளும். ப-ர்.)

ஆலையரைவை அரிசியை உண்டுவந்தவர்களுக்கு வேறு அரிசி பிடிக்காதென்று சொல்ல முடியாது. வேறு அரிசி உண்கிறவர்களுக்கு அந்த அரிசி செரிக்கிறபோது, ஆலையரிசியுண்டு வந்தவர்களுக்கும் ஏன் அந்த அரிசி செரிக்காது? அறுவடையான வுடன் பச்சை நெல்லை அரிசியாக்குவ தாயிருந்தால், அந்த அரிசி எவருக்கும் பிடிக்காதே யொழிய மற்ற அரிசி எவருக்கும் சாதாரணமாகச் செரிக்கக் கூடும். அப்படிப் பச்சை நெல்லையும் அவித்

துக் கொண்டால், அந்தப் புழுங்கலரிசி செரிப்பதில் சிரமமே யிராது.

அரிசி யரைவை

நெல்லை மரத்திரிகை கொண்டும் அரிசியாக்கலாம்; சப்பான் திரிகையிலும் (Japanese Huller) அதை அதிகச் சிரமமில்லாமல் அரிசியாக்கலாம். சப்பான் திரிகை 75 முதல் 100 ரூபா கிரயமேயாகும். மரத்திரிகை யரிசிக்கும் சப்பான் திரிகையரிசிக்கும் வித்தியாசம் அவ்வளவாக இல்லை.

அரிசியில் குறைகிற சத்தை நிரப்பும் விதம்

பாலில் நல்ல பிசிதமும் சுதையமும் ஏ உயிர்ச்சத்தும் பி 2 தொகுதி உயிர்ச்சத்துக்களும் இருக்கின்றன. மோரில் கொழுப்பும் கொஞ்சம் ஏ உயிர்ச்சத்தும் குறைவதைத்தவிர மற்றப்படி பாலிலுள்ள சத்துக்களெல்லாம் இருக்கின்றன. ஆகையால், அரிசியுணவு உண்கிறவர்கள் நிரம்பப் பால் மோர் சேர்த்து வர வேண்டும்.

அரிசி வகை பல இருந்தாலும் அவற்றுள் ஒன்றுக்கொன்று சத்துக்கள் சம்பந்தமாக அதிகமாக வித்தியாசப் படுவதில்லை. ஆகையால், நல்ல சத்துக்கள் நிறைந்த அரிசி யெது வெனத் தேடிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. (நல்ல உரமேறின நிலத்தில் விளையும் நெல்லின் சத்து வீதம் உரமேற்றாத நிலத்து நெல்லின் சத்திருக்கக் கூடியதில்லை. சில உரங்கள் ஏறிய நிலத்தின் அரிசி உருசி யில்லாது மிருக்கலாம்; அதிகமாகக் குழையவும் செய்யலாம். ஆகையால், நெல் வகை பற்றியும் கவனம் இருக்க வேண்டியதுதான். ப-ர்.)

அரிசியினுடைய உயிர்ச்சத்துக் குறைவைப் பயறு வகைகளால் நீக்கிக்கொள்ளலாம். பயறுகளில் வேறு நல்ல சத்துக்களும் இருக்கின்றன. அரிசியிலுள்ள சுதையக் குறைவைக் கேழ்வரகினாலும் கீரை முதலிய இலைக்கறிகளாலும் நீக்கிக் கொள்ளலாம். ஒரு குழந்தைக்கு நித்தம் ஒரு சிரெடை பாற் சுதையம் (Calcium lactate) சேர்த்து வந்தாலும் போதுமானது. ஒரு மாதத்தில் ஒரு குழந்தைக்குச் செல்லக் கூடிய பாற்சுதையம் ஒரு அணா இரண்டணா தான் கிரயமாகும். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கும் பாலுக்குப் பதிலாக பாற்சுதையம் கொடுத்து வரலாம். பெண்கள் கருத்தரித்திருக்கும் காலத்திலும் பின் பால் கொடுத்து வரும் காலத்திலும் பாற்சுதையம் சேர்த்து வருவதே நல்லது. காய்கறிகள் சாதாரணமாகச் சேர்த்து வரும் அளவும் போதாது; இன்னும் கொஞ்சம் அதிகமாகவே சேர்த்து வர வேண்டும்.

நெல்லிக்காய் சி உயிர்ச்சத்து நிறைந்தது (வெளிநாடுகள் சென்றிருக்கும் நம் நாட்டுவீரர்களுக்கு நெல்லிக்காயும் தக்காளியும் பக்குவம் செய்து அனுப்பப் படுகின்றன. ப. ர்.) இன்னும் சில பழங்கள் ஏ உயிர்ச்சத்து நிறைந்தவையாயிருக்கின்றன. மாம்பழம் பப்பாளி தக்காளி ஆரஞ்சு இவை பழங்களிலெல்லாம் சிறந்த சத்துள்ளவை. தக்காளி சௌக்கியமாய் கிடைக்கக்கூடுமாதலால், அதனைத் தாராளமாகவும் சேர்த்துவரலாம்.

அரிசியில் கொழுப்புக் குறைவாக இருப்பதால் வேறு வகையாக எண்ணெய் கொழுப்பு முதலியன சேர்த்து வரவேண்டும். (நெய்யும் நெய்யைக் காட்டிலும் வெண்ணெயும் சிறந்த கொழுப்புணவுகளாகும். ப-ர்.)

மாமிசம் சத்துள்ள தென்றாலும் இப்போதைய பொருளாதார நிலைமையில் அதைச் சேர்த்து வருவது அநேகருக்குச் சாத்தியமாகாது. முட்டை சத்துள்ளதுதானென்றாலும் அதன் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டாலொழிய அனேகருக்குக் கிடைக்கமாட்டாது. மீன்களும் நல்ல சத்துள்ளவைகள் தான். சிறு மீன்களை முழுதாகத் தின்பதால் சுதையம் நிரம்பவும் சேரும்.

சருக்கரையில் உயிர்ச்சத்தேனும் பிசித மேனும் கிடையாது; அதிலிருந்து சத்தி (Energy) யொன்றே கிடைக்கக்கூடும். ஆகையால் உணவுக்காகக் கரும்புச் சாகுபடியை அதிகப் படுத்த வேண்டியதில்லை; மற்றத் தானியங் களின் விளைவை அதிகப்படுத்தியாக வேண்டும்.

---

# ஆ. நாட்டு வைத்தியம் மிருகவாகடம் பாகமுறை சுகாதாரக் குறிப்புக்கள்

## 1. புளியம் பழம்

புத்தியும் மந்தமாகும் பொருமியே உடலம் ஊதும்
பத்தியம் தவறும்சந்நி பாதமாம் சுரங்கள் வீறுஞ்
சர்த்தியும் பித்துந்தீரும் தனுவெலாம் வாதம் ஏறும்
மத்திபந் தாதுபுஷ்டி வருந்திரை நரை புளிக்கே.

தேரையர் குணவாகடம்.

புளிக்குப் புத்தியும் மந்தமாகும்;உடலம் பொரு மியே ஊதும்; பத்தியம் தவறும்; சந்நிபாத (மாம்) சுரங்கள் வீறும்: சர்த்தி (வாந்தி) யும் பித்தும் தீரும்; தனு (உடம்பு) எ (ல்) லாம் வாதம் ஏறும்; தாது புஷ்டி மத்தியம்; திரைநரைவரும்.

## 2. பழம்புளி

தீதில் பழம்புளியைச் சேர்க்கத் திரிதோடம்
வாதமொடு சூலகபம் மாறுங்காண்—ஓதுசுரஞ்
சர்த்தியென்ற தோடம் இவை சாந்தமாங் கண்ணோய்
பித்தமென்ற பேர்ஒழியும் பேசு. [போம்

அகத்தியர் குணவாகடம்.

தீதில் (லாத) பழம்புளியைச் சேர்க்க, திரிதோடம் வாதம் (ஒடு) சூலகபம் மாறும் (காண்); ஓது சுரம் சர்த்தியென்ற தோடம் இவை சாந்தமா(கு)ம்; கண்ணோய் போம்; பித்தம் என்ற பேர் ஒழியும். (பேசு)

3. புளியம்பழத்தில் ஈரம் 20·9 சதமும் பிசிதம் 3·9 சதமும் கொழுப்பு. 1 சதமும் கனி யப் பொருள்கள் 2·9 சதமும் நார்ச்சத்து 5·6 சதமும் கரிநீரகைப் பொருள் 67·4 சதமு மிருக்கின்றன. சுதையம் (Calcium) ·17 சத மும் எரியம் (Phosphorus) ·11 சதமும் இரும்பு 10·9 சதம் கிழாயிரச் சிரெடையுமிருக் கின்றன. 100 சிரெடையில் 283 கனலிச் (calores) சூடும் 100 மூல அலகு எ உயிர்ச் சத்தும் 3 மூல அலகு சி உயிர்ச்சத்து மிருக் கின்றன. (புளி சேர்க்கும்போ திருக்கும் தெளிவு, அது சேராதபோ தில்லாதிருப்பதற் குக் காரணம் புளியிலுள்ள இரும்புச் சத்தே. அதில் இரும்புச் சத்தும் அதிகமாக இருக்கி றது. அந்த இரும்புச் சத்து நம்முடம்பில் சேரு கிற மாதிரி வேறெந்த இரும்புச் சத்தும் சேரு வதில்லை. என்றாலும், பிணியை வளர்க்கும் உவ ரக்காடி (uricacid) அதனால் அதிகமாக உண் டாவதால், நோய் வாய்ப்பட்டிருக்கும்போது அதைச் சேர்ப்பதில்லை. முந்திரிகைப் பழத் தில், அதற்கு அடுத்தபடியாக 4 சதம் கிழாயி ரச் சிரெடை இரும்புச் சத்துமிருக்கிறது. கன லிச் சூடும் அதற்கும் அதிகமாக உண்டாகக் கூடியதாகவும் எளிதில் செரிக்கக் கூடியதாகவு மிருக்கிறது. இந்தக் காரணங்கள் பற்றியே, புளியில்லாப் பத்தியத்தில் முந்திரிகைப் பழத் தைத் தாராளமாகச் சேர்த்து வரும்படியாகச் சொல்லப்படுகிறது. ப—ர்.)

Health Bulletin No. 23

## 4. வழக்கு

புளி ஒரு பலம், சூரத்து நிலாவாரை ஒரு வராகனெடை, கொத்துமல்லி விதை அரை வராகனெடை, வெந்நீர் 8 பலம் இவற் றை 2 மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி அதில் சருக்கரை ½ பலம் சேர்த்து 2 முதல் 4 பலம் வரையில் கொடுக்க வேதனையில்லாமல் சுகமாய்ப் பேதியாகும்.

புதுப்புளி 2 பலம், பசும்பால் 30 பலம் இவ்விரண்டையும் அடுப்பிலேற்றி 8-ல் ஒன்றாகக் காய்ச்சி வடிகட்டிச் சுரங்களிற் கொடுத்தால் தாபம் அடங்கும். உருசியாகவுமிருக்கும். புளியைக் கரைத்து அதில் சருக்கரை அல்லது கற்கண்டு சேர்த்துச் சீதக் கழிச்சல், இரத்தக் கழிச்சல் இவற்றிற்குக் கொடுக்கலாம்.

புளி ஒருபங்கு, உப்பு ஒருபங்கு இவ்விரண்டையும் சேர்த்தரைத்து உண்ணுக்கில் தடவ, அதன் வளர்ச்சி கரைந்துபோம்.

புளி ஒருபலம், அத்திப்பழம் ஒரு பலம் இவற்றை அரைப்படி பாலில் வேகவைத்து, வடிகட்டி அதில் சிறிது இலவங்கம், ஏலம், கருப்பூரம் சேர்த்துக் கொடுக்கச் சுரம் தணியும். மல மிளகும், தேகத்துக்குச் சௌக்கியம் உண்டாகும்.

புளியை நீரில் கலக்கி வடிகட்டி அதில் மிளகுத்தூள், சருக்கரை, இலவங்கத்தூள், கருப்பூரம், ஏலத்தூள் இவைகளில் சிறிது சேர்த்துக் கலக்கிக் குடிக்கத் தேகவெப்பத்தைக் குறைத்துக் கண்ணெரிச்சல், தலைநோய் இவற்றைத் தணிக்கும். பசியுண்டாகும். அரோசகத்தை மாற்றும்.

(குணபாடம்) வைத்தியரத்தினம் முருகேச முதலியார்.

5. குலையின் பலவீனத்துக்குத் தேன் மிகவும் நல்லது. அது குலைக்கு உத்வேகம் அளிக்கிறது. கபசுரவியாதிக்கும் அது நல்லதென்று சமீபத்தில் தெரியவந்திருக்கிறது. கபசுரப் பிணியாளி ஒருவன் இரண்டு இராத்தல் தேன் குடித்தான். வியாதி கொஞ்ச நாட்களுக்குள்ளே ஒரு கடுமையான கட்டத்திற்கு வந்து தணிந்துவிட்டது. அதற்குப் பிற்பாடு சுரம் அதிகரிக்கவேயில்லை; நாடியும் நன்றாக அடித்துக் கொண்டிருந்தது. என்னைக் கேட்டால் தேன் பலவீனப் பட்டவர்களுக்கெல்லாம் நல்லது; முக்கியமாக, அது குலைநோய் (Heart disease) உடையவர்களுக்கு நல்லதென்று தைரியமாகச் சொல்லுவேன். (குலையின் தசைநார்களுக்குப் பலமளிக்கும் கரிசம் (Formaline) அதிலிருக்கிறது. (ப-ர்)

நல்வழி.

6. "சாராயம் குடிக்கும் போதெல்லாம் ஒருவன் வியாதிக்குட்படுகிறான். அவன் குடிக்கும் ஒவ்வொரு தடவையும் கேடு அதிகரித்துக் கொண்டே வருகிறது. விடாமல் குடித்துக் கொண்டே வந்தால், வெண்கூடுகளும் செங்கூடுகளும் நிரந்தரமாகக் கெட்டுவிடும். குடிக்காமல் இருக்கும் சமயத்திலுங் கூட, அவைகளுக்குள்ள நோய் எதிர்ப்பாற்றல் போய் விட்டதாகத் தெரிகிறது. குடிகாரர்கள் மிதமாகக் குடித்தாலும் கூட பலவீனர்களாக இருப்பதற்குக் காரணம் இதுவே.

நல்வழி.

---

## 8. கிராமவாசிகள்: விபசாயிகள்.

# பயிரிடுபவரின் வறுமை

## (அதன் காரணங்களும் சிகிச்சையும்)

## PEASANT'S POVERTY: ITS BROBLEMS AND CURE

CHOWDHRY MUKHTAR SINGH

(சாரம் I)

(இவ்வாசிரியர் விபசாயிகளுடன் நெருங்கிப் பழகியவர்; அவர்களுடைய சங்கடங்களையும் நன்றாக அறிந்தவர்; அவற்றை நீக்குவதற்கான முறைகளையும் இந்நூலில் வெளியிடுகிறார். இப்பத்திரிகையில் அதன் சுருக்கமே வரக்கூடுமாதலால், அங்கிலம் கற்றிருப்பார் முதல் நூலை அவசியம் வாசித்து அதனைச் சிந்தித்து அவசியமானவற்றைக் கையாளுவதால் பெரும் பயனடைவர். மூலநூல் அலகாபாத்தில் லீடர் அச்சுக்கூடத்தில் (The Leader Press) கிடைக்கும். கிரயம் ரூ 1-8-0. இவ்வாசிரியர் கருத்

தோடு நாம் மாறுபடும் இடங்களில் நம் கருத்தையும் விளக்கிக்காட்டுவோம். இவ்வாசிரியர் எழுதியிருக்கும் குடிசைத் தொழில்கள் என்னும் கட்டுரை கிராமதூதன் இரண்டாம் மலர் ஆறுவது இதழிலும் பயிரிடுவோர் பெறத்தக்க சௌகரியங்கள் என்ற நூலின் சாரம் முதல் மலர் நாலாவது ஐந்தாவது ஆறுவது ஏழாவது இதழ்களிலும் வந்திருக்கின்றன

## முன்னுரை

"குற்றவாளிக்கு அவன் தண்டனைக் காலத்தில் ஆகாராதிகள் கொடுத்துக் காப்பாற்றும் அரசாங்கம் எளியவனுக்கு அவ்வித உதவி செய்யாதேன்றால், குற்றம் செய்வதே உசிதமெனத் தூண்டுவதாகும்"

John Stuart Mill.

நம்மில் 73. 9 சதமாகும் விபசாயிகளினுடைய கேவலமான நிலைமையை அவர்களுடைய வீடுகளுக்குப் போய்ப் பார்த்தால்தான் தெரியும். அவர்களுடைய கிராமங்கள் அனேகத்துக்குக் கட்டைவண்டிதான் போகும்; அதுவும் நாம் போய்ச் சேருவதற்குள் நம் முடம்பையும் குலுக்கிக் குலுக்கி மேலெல்லாம் நமக்கு வலியெடுக்கவும் செய்திடும். சரள் விரித்த பாதையே யிருக்காது; வெறும் பாதை யிருந்தாலும், அதுவும் மேடும் பள்ளமுமாகவே யிருக்கும். மோட்டார் போகவே போகாது. கோடைக் காலம் பாதை யெங்கும் தூசி பரந்துகொண்டிருக்கும். மழைக் காலம் சேறும் சகதியுமாகவேயிருக்கும். வழியில், வெய்யிலுக்கு ஒதுங்க நிழலுமிருக்காது; வெயர்வையும் கொட்டும். அவர்களுடைய கிராமத்துக்குப்போய் வீடுகளைப் பார்த்தாலோ, கூரைகள் வழியாக வீட்டிற்குள்ளும் சூரியன் பிரகாசிக்கும். அந்தக் கூரைகளை அடிக்கடி பழுது பார்த்து வந்தாலொழிய, மழைக்காலத்தில் அந்த வீடுகளில் குடியிருக்க முடியாது. சாணியும் மண்ணும் கலந்துதான் வீட்டுச் சுவர்களில் பூசியிருக்கும். சுண்ணும்பு வாங்கி வெள்ளையடிக்க அவர்களிடம் பணம் கிடையாது. காற்றை வெளியேதான் பார்க்கலாம்; வீட்டிற்குள் காணமுடியாது. பனிகாலம் பெய்யும் பனியெல்லாம், வீட்டிற்குள் சாதாரணமாக இறங்கும். குப்பைகள் வீட்டைச் சுற்றியிருக்கும் முடுக்குகளில் போடப்பட்டிருக்கும். சாக்கடைத் தண்ணீரும் அவற்றில் ஓடும். வீட்டுக்குப் பக்கத்தில் அல்லது வீட்டின் முற்றத்திலேயே குப்பைக் கிடங்கையும் பார்க்கலாம். கிராமத்திற்குப் பக்கத்திலிருக்கும் ஊருணியில் உள்ள தண்ணீரும் சேறுக இருக்கும்; கொசுக்களும் அங்கே நிறைய உண்டாகி ஊரெல்லாம் சுற்றும்; அந்த ஊருணியில் தான் காலலம்புவதா யிருப்பதால், அந்த ஊருணியின் கரையிலேயே மலசலம் கழிப்பதாயிருக்கும். அந்த நரகலையும் மழைத்தண்ணீர் ஊருணிக்குள்ளாகவே அடித்துக்கொண்டு போகும். பன்றிகளும் அந்தத் தண்ணீரில்தான் புரளும், வண்ணன் வேட்டி துணிகள் துவைப்பதும் அந்தத் தண்ணீரில் தான்; சனங்கள் ஏகதேசம் குளிப்பதும் அந்தத் தண்ணீரில்தான். மேலை நாட்டுப் பன்றிகளின் குடியிருப்புக்கும் கேவலமான வீடுகளில் குடியிருப்பதோடு நம் நாட்டுப் பன்றிகளோடு ஊருணித் தண்ணீரையும் கலக்கி வருகின்றனர். நம் விபசாயிகளென்றால், அவர்களைப் பற்றி வேறென்ன தான் சொல்லுவது?

பெண்கள் நகைகள் தரித்திருப்பதும் அபூர்வம். சிலர் தங்க மூக்குத்தி தரித்திருப்பது தவிர வேறு தங்கநகை தரித்திருப்பதைக் காணமுடியாது. அவர்களில் அதிட்டமுள்ளவர்கள் சிலர் வெள்ளி நகைகள் அணிந்திருப்பார்கள்; ஏழைகள் சிலர் வெண்கல நகைகளும் அணிந்து கொள்ளுவார்கள்; அனேகர் நகையென்பதையே அறியார்கள். அவர்களுடைய வீட்டிலுள்ள பாத்திரங்களெல்லாம் மண்பாத்திரங்களாகவே யிருக்கும். அவர்களில் அதிட்டமுள்ளவர்கள் சிலரிடந்தான் பித்தளைப் பாத்திரங்களைக் காண முடியும்.

அனேகர் மாமிச உணவு அபூர்வமாகவே கொள்வார்கள். மீன் சௌக்கியமாக இருந்

தால், கொஞ்சம் அதிகமாகவும் சேர்த்துக் கொள்வர். சோளமும், தினையும், காணமும், கடலையுந்தான் அவர்களுடைய சாதாரண உணவு. நொய்யரிசிக் கஞ்சியில் தண்ணீரை விட்டுப் பெருக்கிக் கலக்கிக் குடிப்பதுதான் அதிகமாக இருக்கும். உப்பும் மிளகும் கொஞ்சம் சேர்த்துக் கொள்ளுவார்கள். சருக்கரை வாங்க அவர்களிடம் பணம் இருக்காது. விலைப் போகாத நெல்லைத்தான் தங்களுணவிற்கு வைத்துக் கொள்ளுவார்கள். காய்கறியெல்லாம் வீட்டில் விசேடம் வந்தன்றைக்குத் தான் சேர்த்துக் கொள்ளுவார்கள். அனேகர் வீட்டில் பால் மாடு இருக்காது; பால் மாடு இருக்கிறவர்கள் வீட்டிலும் மோர்த்தண்ணீர் தான் அவர்களுக்கு மிஞ்சும். அவர்களுடைய இடுப்புகளிலும் நல்ல துணி கிடையாது; கிழிந்த கந்தல்களே யிருக்கும், மழை பனி காலத்திற்குப்போர்வையும் கிடையாது. எங்கே யாவது அனல்போட்டிருந்தால், அங்கேபோய்த் தங்கள் உடலையும் வாட்டிக் கொள்ளுவார்கள்.

அவர்களுடைய கண்கள் குழிவிழுந்து போயிருக்கும்; வெளிரிப் போயிருப்பார்கள்; சிறுவயதிலேயே சாவார்கள். பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் சாகிறவர்களைக் காட்டிலும் கஞ்சிக்கில்லாமல் சாகிறவர்களே யதிகம். உயிரைக் கொண்டு போவதற்கு இல்லையே யென்ற விசாரத் தோடேயே உயிரோடிருந்து வருவார்கள். சீமையில் ஆண்களின் சராசரி வயது நாற்பத்தாறும் பெண்களின் சராசரி வயது ஐம்பதுமாக இருக்க, நம் நாட்டில் இருபத்திரண்டரையும் இருபத்து மூன்றே காலுமாக இருக்கின்றன.

விடியுமுன் எழுந்திருக்கிறார்கள்; நடுச் சாமம்வரை வேலை பார்க்கிறார்கள், காற்றென்றேனும், மழையென்றேனும், பனியென்றேனும் சும்மா இருப்பதில்லை. மழையோடும் வயலில் வேலை பார்க்கிறார்கள். அப்படி வேலை பார்த்தும் பிரயோஜன மிருப்பதில்லை. அறுப்புக்கு முன் தீர்வைத் தண்டம் வந்துவிடுகிறது; கடன்காரர்களெல்லாம் களத்திற்கு வந்து வளைந்துகொள்ளுகிறார்கள். பல மாதங்களாகப் பாடுபட்டுவிட்டு வெறும் ஆட்களாக வீடு வந்து சேருகிறார்கள். கடனிலே பிறந்து கடனிலேவளர்ந்து கடனிலே சாகிறார்கள். வாரிசுகளுக்குச் சொத்து வைத்திராதவர்களும், கடன்வைத்து விட்டுப் போகத்தவறுவதில்லை. எத்தனைதான் இப்படியெல்லாம் சங்கடப்பட்டாலும், இப்படியாகவே என்றைக்கும் இருந்துவிடுமா? நல்ல காலம் பிறக்காதா என்றெண்ணியே உயிரோடிருந்து வருகிறார்கள். அவர்களை வாழ்வதாகச் சொல்லுவதற்கில்லை; அவர்களை விட்டு உயிர் போக மாட்டேனென்கிறதென்றே சொல்ல வேண்டும்.

அரசாங்கமும் சமூகச் சீர்திருத்தக்காரர்களும், விபசாயிகளுடைய பாழும் வயிற்றை வருடமெல்லாம் எப்படி நிரப்பி வருவதென்பதைக் கவனித்தாகவேண்டும்; அவர்களுக்கு வேண்டியன வெல்லாம் செய்தாகவேண்டும். அவர்களில் அனேகர் பிறந்த நாளிலிருந்து இறக்கும் நாள்வரை வெகுநாட்களைப் பட்டினியாகவே கழிக்கின்றனர். நம் நாட்டின் குறையைச் சுருக்கமாகச் சொல்லுவதென்றால், விபசாயிகளின் வயிற்றுக்கில்லாக் கொடுமையென்றே சொல்லவேண்டும். நாம் உண்மையாக நம் நாட்டின் நன்மையில் அக்கறையுள்ளவர்களாக இருந்தால் இந்த வறுமையைப் போக்குவதற்கான முயற்சிகளெல்லாம் செய்து தீரவேண்டும்; இல்லாது போனால், சமூகப் புரட்சிகளின் கோரமான சம்பவங்களுக்கு நாம் தயாராக இருக்கவேண்டியதுவரும்.

(தொடரும்.)

## 9. கதை: சரித்திரம்

# கூறுகெட்ட குப்பான்

[ஒரு தால்சுடாய் கதை: தமிழ் நாட்டிற்கேற்பச் சற்றே மாற்றியது.]

## IV

கலிப்பகையைச் சீரழித்த குறளி, தான் முதல் நாள் சொல்லியிருந்தபடியே நல்லதம்பியின் குறளிக்கு உதவிசெய்ய வந்தது. ஆனால், நல்லதம்பியின் குறளியைக் காணமுடியவில்லை. அதைப்பல இடங்களிலும் தேடிப்பார்த்தது. அது தட்டுப்படவில்லை; ஒரு துளையைத்தான் கண்டது. அதற்கு ஏதேனும் கேடுவந்து அழிந்து போயிருக்கவேண்டும்; அதனால்தான் அதைக் காணமுடியவில்லையென்று தன்னைத் தேற்றிக்கொண்டது. நிலமெல்லாம் உழுதாய் விட்டாலும், நாளை கீரை அறுக்க வரமாட்டானா? அப்பொழுது அவனைச் சீரழித்துக் கொள்ளலாமென்று முடிவு செய்துகொண்டது. கீரைப்பாத்தியெல்லாம் தண்ணீரை விட்டுப் பாழாக்கியது.

நல்லதம்பி காலமே வந்தான்; அரிவாளைத் தீட்டினான்; கீரையை அறுக்கப் போனான். எங்கே பார்த்தாலும் பாத்திகளுக்கு மேல் நான்கு விரற்கிடைத் தண்ணீர் கட்டியிருந்தது. இப்படியுமா ஒரு வேலை நடக்கிறதென்று பெருமூச்சு எறிந்து நின்றான். இது யார் வேலையென்றுசொல்லிக்கொண்டு ஒருஓரமாகத் தண்ணீரை வடியச் செய்தான். அந்தக் குறளியும் இவன் பேச்சைக் கேட்டது. இவன் ஒரு முரடனாகத் தெரிகிறது. இவனை வேறுவழியாக மடக்க வேண்டும் என்று உறுதி செய்துகொண்டது. தண்ணீரெல்லாம் வடிந்த பிறகு கீரையை அறுத்தான். அரிவாளைக் கைப்பிடி கீரைக்கும் கீழ்ப்போகாமல் தரையை நோக்கிப் போகும்படியே அந்தக் குறளி செய்து கொண்டிருந்தது. என்றாலும், அதற்கெல்லாம் நல்லதம்பி சலிக்கவில்லை. கடைசிப் பாத்திக் கீரையை அறுக்கும்போது, குறளி பின்னும் அதிகமாகத் தொந்தரவு செய்ய, அதன் வாலையும் சேர்த்து அறுத்து விட்டான். பிறகு தன் தங்கையிடம் கீரையை வீட்டுக்குக் கொண்டு போய்ச்சேர்க்கும்படிசொல்லிவிட்டுக் கம்பந்தட்டையைஅறுக்கப்போனான். அங்கேயும்அந்தக் குறளி அவனுக்கு முன் போயிருந்து அவனைத் தொந்தரவு செய்தது. அதற்காகக் கம்பந்தட்டை அறுவையும் நிற்கவில்லை. குறளிக்குத் தான் பல காயங்களேற்பட்டன. கம்பந்தட்டை அறுவையும் முடிந்தது. நாளை சோளநாறு களையறுக்கலாமென்றிருக்கிறேன். நாளைக்கு அங்கே வா பார்த்துக் கொள்ளலாமென்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

மறுநாள் விடியற்காலம் நாற்றுக் கொல்லையை அந்தக் குறளி வந்து பார்த்தது. அங்கே அறுக்க வேண்டியது ஒன்றுமில்லை. முதல் நாள் இராத்திரியே யெல்லம் அறுப்பா யிருந்தது. அதன் பின், அந்தக்குறளி நாறுக்குள் நுழைந்து அதைக் கெடுக்க ஆரம்பித்தது. அதை வாழ்வரசி வந்து பரவலாக விரித்துக் காயப்போட்டாள். கொஞ்ச நேரமான பின், நல்லதம்பி வந்து கவட்டைக் கம்பால் பிரட்டிக் கொடுத்து வந்தான். அப்பொழுது அந்தக் கம்பில் குறளி அகப்பட்டு நெளிந்தது. அதையெடுத்து, "இன்னுமா வந்தாய், உன்னைத் தொலையாமல் விடுகிறதில்லை" யென்று அதைப் பக்கத்திலிருந்த கட்டைவண்டியின் மேல் எறியக் கையை ஓங்கும்போது, அது, "நான் பழையகுறளி யல்ல; உன் பெரிய அண்ணனைக் கெடுத்துவந்த குறளி. என்னைக் காப்பாற்று; உனக்கு என்ன வேண்டுமென்றாலும் செய்

கிறேன்'' என்று செல்லியது. நீ என்ன செய்யக் கூடுமென்று கேட்க, "எதிலிருந்தும் உனக்குப் போர் வீரர்கள் உண்டு பண்ணித்தரக் கூடும்'' என்றது. "அவர்களால் எனக்கென்ன பிரயோசன மிருக்கும்? அவர்களெதற்கு'' என்றான். "அவர்கள் உன்னைச் சந்தோசமாக வாழச் செய்ய முடியும்'' என்றது. "அவர்களால் பாடமுடியுமா?'' வென்று கேட்டான், "பாடச் சொன்னால் பாடவும் செய்வார்கள்'' என்றது. அப்பொழுது ஒரு சோள நாற்றை எடுத்துக் கொடுத்து இதை நேராகப் பிடித்துத் தரையில் ஊன்றி நாறே நாறே வீரனாகவா வென்றால், உடனே வீரனும் தோன்றி விடுவான் என்றது. அப்படியே ஒரு பிடி நாறுகள் கையிலெடுத்துச் செய்து பார்த்தான். மேளதாளங்களோடு வீரர்கள் தோன்றிவிட்டார்கள். அம்மட்டில், வேடிக்கையாகத்தானிருக்கிறதென்று சிரித்துக்கொண்டான். அப்பொழுது அந்தக் குறளி தன்னைப் போக விடவேண்டுமென்று கேட்டது. எனக்கு வீரர்கள் வேண்டாதபோது அவர்கள் பழைய படி தீவனமாக வேண்டும். அதற்கும் சொல்லிக்கொடுத்துவிட்டுப்போ என்றான். வீரர்களை பழையபடி நாறாக மாறுங்களென்றால் மாறிவிடுவார்கள். அதுவும் சிரமமில்லையென்றது. அப்படியே சொன்னான் அவனும்; போர் வீரர்களும் மாறிவிட்டார்கள். அவ்வளவில் அதுவும் விடை பெற்றுக்கொண்டு ஓடிவிட்டது. அது போய் மறைந்த இடத்திலும் துளை ஒன்றே மிஞ்சியது.

இருட்டின பிறகு நல்ல தம்பி வீட்டுக்கு வந்தான். அங்கே பேய்ச்சிமுத்தும் அவன் மனைவியும் உணவருந்திக் கொண்டிருந்தனர். பேய்ச்சிமுத்து இவனைப் பார்க்கவும், பழைய படி வியாபாரம் ஆரம்பிக்கிறவரை இங்கேதான் நானும் என் மனைவியும் இருந்து போகலாமென்று வந்திருக்கிறோமென்றான். சரிதானென்று சொல்லிக் கொண்டே நல்ல தம்பி மேல்துண்டை யெடுத்துப் போட்டுவிட்டுப் பக்கத்தில் போய் உட்கார்ந்தான். இந்தக் கோமாளிகூட இருந்து சாப்பிடவா? என்று சொன்னாள் பேய்ச்சிமுத்துவின் மனைவி. பேய்ச்சிமுத்தும், "உன்மேலெல்லாம் வியர்வை கொட்டுகிறதேயப்பா! நீ வெளியே யிருந்து சாப்பிடு'' என்றான். அம்மட்டில், நல்ல தம்பியும் தன் வட்டிலைக் கையிலெடுத்துக்கொண்டு வெளியேபோய் விட்டான்.

## V

பேய்ச்சிமுத்துவின் குறளியும் நல்ல தம்பியின் குறளிக்குதவி செய்ய அன்றிரவே வந்து சேர்ந்தது. அவனுடைய தோட்டங்களை யெல்லாம் சுற்றிப்பார்த்தது; அங்கே தன் தோழர்களெவரையும் காணவில்லை; ஒரே ஒரு துளைதான் அதற்குத் தெரிந்தது. அவர்கள் கெட்டழிந்து போயிருக்க வேண்டும்; இல்லையென்றால், அவர்களை இங்கே காணாதிருக்கக் காரணமில்லை அவர்கள்தானெதற்கு? நானே பார்க்கிறேன் அந்த வேலையை யென்று சொல்லிக்கொண்டு நல்ல தம்பியைத் தேடிப் போயிற்று.

நல்ல தம்பியின் அண்ணன்மார், பழைய வீடுகள் தங்களுக்கிருக்கச் சௌகரியமில்லை யென்றும் புதிதாக இரண்டு வீடுகள் கட்டித் தரவேண்டுமென்றும் அவனிடம் சொல்லியிருந்தார்கள். அதற்காகக் கட்டைகள் தயாரிக்க, நல்ல தம்பி மரம் வெட்டப் போயிருந்தான். இந்தக் குறளி அங்கே போய்ச் சேர்ந்தது. ஓடிப் போய் அவன் வெட்டிக்கொண்டிருந்த மரத்தின்மேல் ஏறிக்கொண்டது. அவன் ஒரு கொப்பை வெட்டி அதைக் கீழே விழத்தட்டிக்கொண்டிருந்தான். அது அந்தக் கொப்பைக் கீழே விழாதபடி தடுத்துக் கொண்டது. பிறகு, அதற்காக ஒரு தடியை வெட்டி அந்தத் தடியைக்கொண்டு எவ்வி அதைக் கீழே தள்ளினான். அதன் பிறகு, இன்னொரு மரத்தை வெட்டினான்; அதிலும் இப்படியே நடந்தது. அதன் பின் மூன்றாவது மரம் ஒன்றை வெட்டினான்; அங்கேயும் இப்

படியே நடந்தது. இப்படியாக அன்று அவன் வெயர்க்க விறுவிறுக்க வேலைசெய்தும் அவன் நினைத்தபடி வேலை முடியவில்லை. முதுகும் வலிக்க ஆரம்பித்தது. அப்படியே அவன் கோடரியைக் கொண்டு மரத்துத் தூரில் ஒரு தறி போட்டு நிறுத்திவிட்டு உட்கார்ந்தான். அந்த மரத்திலேறின குறளியும், தன் காரியம் பலித்துவிட்டதென்று சந்தோசப்பட்டது. அவனும் அலுத்துப்போனான்; தானும் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள்ளலாமென்று நினைத்தது.

நல்லதம்பி திடுமென்று எழுந்திருந்து கோடரியை யெடுத்து அந்த மரத்தை ஒரே போடாகப் போட்டான். அந்த வெட்டிலேயே மரமும் சாய்ந்துவிட்டது. இப்படி நடக்குமென்று, குறளி நினைத்திருக்கவில்லை. மரம் கீழே சாயவும், குறளியின் காலும் மரத்திற்குக் கீழே அகப்பட்டுக் கொண்டது. குறளியிருந்த கொப்பை வெட்டப்போனான். குறளியைப் பார்த்தான். அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. "வருவதில்லையென்று சொன்னாயே, திரும்பவும் வந்திருக்கிறாயே" யென்று கேட்டான். அதற்கு அது, "நானொரு புதுக் குறளி; இதுவரை இங்கு வந்ததில்லை. உன் அண்ணன் பேய்ச்சிமுத்தை விட்டு நேற்றுத்தான் வந்தேன்" என்றது. "நீ யாராயிருந்தாலென்ன? உன்னைத் தொலைத்துவிட வேண்டியதுதான்" என்று சொல்லிக்கொண்டே கோடரியை ஓங்கினான். "என்னை எப்படியும் காப்பாற்ற வேண்டும். நீ சொன்னபடியெல்லாம் கேட்கிறேன்" என்று அந்தக் குறளி மன்றாடியது. "நீதான் எனக்கு என்ன செய்திடக்கூடும்" என்று கேட்டான். "உனக்கு வேண்டும் பணமெல்லாம் உண்டுபண்ணிக் கொள்ளச் சொல்லித்தருவேன்" என்றது. எங்கே, செய் பார்ப்போமென்று சொன்னான். அந்த மரத்துப் பச்சையிலையை யெடுத்துக் கசக்கினால், பவுனாகத் தானே விழுமென்று சொல்லிற்று. அப்படியே செய்தான். பவுன்களாகக் கீழே விழுந்தன. அம்மட்டில், சரிதான் நீ போவென்று அந்தக் குறளிக்குப் போக அனுமதிகொடுத் தனுப்பிவிட்டான். அதுவும், தரையைத் துளைத்துக் கொண்டு போய்விட்டது.

(தொடரும்.)

---

## 10. குடிசைத் தொழில்: கைத்தொழில்

# கண்ணாடி வளையல்

WAHIDA AZIZ

நம் நாட்டில் மாத்திரம் எம் மதத்தினரும் எச் சாதியாரும், தனவந்தராயினும் தரித்திரராயினும் கண்ணாடி வளையல் அணிந்து கொள்ளுவர். மேற்குத் தேச நாகரிகம் எவ்வளவு பரவினும் நம் நாட்டுப் பெண்கள் சித்திர வர்ணச் சேலை யுடுத்துவதையும் கண்ணாடி வளையல்களணிவதையும் விடமாட்டார்கள்.

தற்காலத்தில் நம் நாட்டில் மிகவும் அழகான வளையல்கள் செய்யப் படித்திருக்கின்றனர். சப்பானியர் செய்தனுப்பும் வளையல்கள் அவ்வளவு அழகானவையல்ல. பிரோசபாத்து என்னும் சின்ன ஊரில் செய்யப்படும் வளையல்களோ விதவிதமானவை—வெகு விசித்திரமானவை—கண்ணைக் கவரக் கூடியவை—பெண்கள் உடுத்தும் உடைக்கேற்ற வர்ண வளையல்கள் அங்கு வாங்கலாம்.

1925-ம் வருடம் வரை வளையல் செய்வதில் இங்கு மாறுதல் ஏற்படவில்லை. தற்கா

லத்திலோ அதே தொழிலாளி அதே தொழிற் சாலையில் அதே ஆயுதங்கள் வைத்துச் செய்து அடுக்குகின்ற வளையல்கள் வேறு மாதிரியாக இருக்கின்றன. பல வர்ணத்தில் பள பளப்பான பட்டு வளையல்கள் வெளியாகின்றன. பல வகையான வளையல்களும் செய்யப் படுகின்றன.

பலவர்ணக் கண்ணுடிக் கம்பிகளை வளைத்து வளையல் செய்கிறவர்கள் ஒருபக்கம்; அதற்குத் தங்க மையினால் வர்ணம் பூசுகிறவர்கள் ஒருபக்கம் ; வளையல்களைப் பல வகையாய் அழகு படுத்துகிறவர்கள் ஒருபக்கம்; இப்படியாக, வீதிகளில் உட்கார்ந்திருக்கிற காட்சி அங்குக் காணலாம். அவர்கள் வேலை செய்வதைப் பார்த்தால், மிகவும் ஆச்சரியமாக இருக்கும். கைகளாற் பாடுபட்டுக் கடும்வேலை செய்து கணக்கற்ற வளையல்கள் செய்கின்றனர். வருடம் ஒன்றுக்கு ஒருகோடி ரூபா பெறுமான வளையல்கள் இவ்வூரில் செய்யப் படுகின்றன. நம் நாட்டில் செய்யப்படும் வளையல்களைப் போலச் செய்ய, இன்னும் சப்பானியருக்குத் தெரியாமலிருக்கிறது. நம் நாட்டினர் விசித்திர வேலை செய்வதில் மிகவும் திறமை வாய்ந்தவர்கள்.

வித்தியாதனம்

---

## 11. செய்தித் திரட்டு:

## அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்.

1. நம் நாட்டின் பருத்தி விளைவு 7 சதமானம் அதிகமிருக்கக்கூடுமென்று தெரிகிறது. அமெரிக்காவில் 1939-ம் வருட விளைவே யதிகம். அதற்கும் 140 இலட்சம் பேல் அதிகமாக 1940-ம் வருடத்தில் விளைந்திருக்கிறது.

Indian Information.

2. சென்ற வருடம் பதினேழு லட்சத்து இரண்டாயிரத்து அறுநூற்றெண்பது தன் (ton) நிலக்கடலை விளைவு சராசரி விளைவே பதினேழு லட்சத்து ஏழாயிரத்து ஐந்நூற்றைம்பது தன் தானாகும். நாளிது வருடத்தில் பதினேழு லட்சத்து அறுபதினாயிரத்து எண்ணூறு தன் விளையுமென்றெதிர் பார்க்கப்படுகிறது. சாதாரண விளைவையும் செலவழிக்க முடியாத காலத்தில், இப்படியதிகமாகவும் விளைவதால் நல்ல விலை கிடையாது ; விலை விழுந்தும் போகலாம். இனிமேலேனும் நிலக்கடலைச் சாகுபடியை நிறுத்தி வேறு சாகுபடி செய்யவேண்டுமாய்ச் சமுசாரிகளைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. வேறு என்ன சாகுபடி செய்யலாமென்று விபசாய இலாகா அதிகாரிகள் யோசனை சொல்லுவார்கள்.

Press Note No 20.

3. நிலக்கடலைச் சம்பந்தமாக இந்திய அரசாங்கமும் சீமை உணவு அமைச்சரும் ஒரு ஏற்பாடு செய்திருக்கின்றனர். அதன்படி தென்னிந்தியாவிலிருந்து அங்குப் போய்ச் சேரும் ஒவ்வொரு தன் (ton) நிலக்கடலைக்கும் 25 சில்லிங் வீதம் வட்டம் (Rebate) தரப்படும். அப்படிச் சேருகிற தொகையை ஏக்கருக்கு இவ்வளவு என்பதாக நிலக்கடலை சாகுபடியாயிருந்த பரப்பின் பேரில் சமுசாரிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும்.

The Madras Agricultural Journal.

4. உலகத்திலுள்ள மாடுகளில் மூன்றிலொரு பாகம், 20 கோடி மாடுகள் நம் நாட்டிலிருக்கின்றன ; அவற்றினால், கிடைக்கும் மிச்சமும் 1000 கோடி ரூபாவாகும்; அதாவது, மாடு ஒன்றுக்குச் சராசரி ரூ 50 மிச்சமாகும்.

Indian Information.

5. சில மாடுகள் நீண்டகாலம் தொடர்ந்து மேய்வதால் மலம் புல் சேதமாகிற மாதிரி, சில காலம் விட்டு விட்டுப் பலமாடுகள் மேய்வதாலும் சேதமாவதில்லை. ஆகையால், பிந்திய முறை சேலம் தென்பகுதிக் கூப்புகள் நான்கு உள்பட அனேக மலங்காடுகளில் அநுஸரிக்கப்பட்டு வருகிறது. அங்கே, இது வரை மேய்ச்சலுக்கு விடாத 2068 ஏக்கர் புல்லும், இப்படி மாறிமாறி மேய்வதால், 1035 மாடுகளுக்குப் போதியதாக இருக்கிறது.

Press Communique No 6.

6. 1349-ம் பசலியில், ரூ 1,91,169 தீர்வைப் பாக்கிக்காக ரூ 4,02,139 பெறுமான நிலங்களை ஏலம் போட ரூ 1,26,482 வசூலாயிற்று. நிலங்களை விற்றதில் புன்செய் நிலங்கள் தீர்வைக்கு $3\frac{1}{5}$ மடங்கும் நன்செய் நிலங்கள் $10\frac{1}{5}$ மடங்கும் கிரயமாயிற்று. 1348-ம் பசலியில் புன்செய் நிலங்கள் $8\frac{1}{2}\frac{1}{7}$ மடங்கும் நன்செய் நிலங்கள் $8\frac{1}{2}$ மடங்கும் கிரயமாயின.

Report on the settlement of land Revenue 1939—40.

7. இந்த மாகாணத்தில் கைத்தறி நெசவே முக்கியமான குடிசைத் தொழில். மத்திய கூட்டுறவு நெசவுகாரர் சங்கத்தின் மூலம் அதை விருத்தி பண்ணவும் விற்பனை சௌகரியங்கள் செய்து தரவும் அரசாங்கம் செய்த பிரயத்தனங்களை நெசவுகாரர்கள் ஏற்றுக்கொள்ளாததால் நன்மை யெதும் ஏற்படவில்லை.

C. Pand Berar Govet's Resolution.

8. சிந்தலதேவி குற்றவாளி வகுப்புக் குடியிருப்பில், வருடத்திற்கு 60 பெயருக்கு 4500 ரூபா கிடைக்கும்படியான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் நித்தம் 100 குரோசு தீப்பெட்டி செய்வார்கள். அதற்கு நிரந்தரமாக வேண்டிய சௌகரியங்களுக்காக ரூ 2000 வரை அரசாங்கம் செலவழித்திருக்கிறது. வருடந்தோறும் செலவாகிற ரூ 44500ம் தீப்பெட்டியின் விற்பனையிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும். மேற்கிந்திய தீப்பெட்டிக் கம்பெனிக்குத் தீப்பெட்டி விற்கப்பட்டு வருகிறது.

Press Communique No 6.

## ஆ. கிராமப் புனருத்தாரண ஸ்தாபனச் செய்திகள்.

1. முதியோர் ஆண்கள் வகுப்புக்களில் 20 பெயருக்குக் குறையாமலும் பெண்கள் வகுப்புக்களில் 15 பெயருக்குக் குறையாமலும் இருக்கவேண்டும். பள்ளியின் துவக்கத்தில் தட்டுமுட்டு முதலியவற்றிற்காக ரூ 40 உபகரண உதவித் தொகை (Equipment grant) கொடுக்கப்படும். எழுதப்படிக்கத் தெரிந்து கொள்ளுகிறவர்கள் எண்ணிக்கையின் பேரில் தலைக்கு ரூ 4 க்கு மேற் போகாமல் திட்டச் செலவுக்காக மாதம் ரூ 5ம் எழுதப் படிக்கத் தெரிந்துகொள்ளுகிறவர்கள் எண்ணிக்கையின் பேரில் தலைக்கு ரூ 2 ஆகவும் உதவித் தொகை கொடுக்கப்படும்.

சாதாரணக் கிராமவாசிகள் படிக்கக்கூடிய புத்தகங்கள் படங்களுடனும் விளக்கங்களுடனும் வெளிவருதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

Bombay Information.

2. மேலக்கண்டேசு ஜில்லா சிந்துகேதில் ஒரு அரிசன உணவு விடுதி கட்டுவதற்குக் கலக்டர் அஸ்திவாரக் கல் நட்டியிருக்கிறார்.

Bombay Information.

3. ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குக் கச்சு (Tape) நெய்யக் கற்பித்து வரவேண்டுமென்று தெனுலி நகராண்மைக் கழகம் தீர்மானித் திருக்கிறது.

மெயில்.

# இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

1. சென்னை நில அடைமான பாங்கு உத்திரவாதப் பத்திரங்கள் (Debentures) வகைக்குச் சென்னை அரசாங்கம் ரூ 250 இலட்சம் வரை அசலுக்கும் வட்டிக்கும் உத்திரவாதம் கொடுத்திருந்ததை ரூ 310 இலட்சம் வரைக்கும் உயர்த்தியிருக்கிறது.

மெயில்.

2. நில அடைமான பாங்குக்கு அடைமானம் வைக்கப்பட்ட தாவர சொத்து கோர்ட்டு ஏலத்துக்கு வந்தால், அந்த ஏலத்தைச் சில்லா கெசட்டிலும் பிரசுரம் செய்ய வேண்டு மென்றும் அப்படிப் பிரசுரமாகும் தாள்களைச் சம்பந்தப்பட்ட நில அடைமான பாங்குகளுக்குக் கலக்டர் இனமாக அனுப்ப வேண்டு மென்றும் சென்னை உயர்நீதி மன்றம் (Highcourt) எல்லாக் கீழ் மன்றங்களுக்கும் கற்பனை கொடுத்திருக்கிறது.

Press communique No. 6.

3. தஞ்சை சில்லா திருவாரூரில், தஞ்சை திரிசிராப்பள்ளி நெல் விற்பனைப் பெருங் கழகம் (Federation) ஒரு இலட்ச ரூபா முதலுடன் சனவரி மீ 29உ துவக்கப்பட்டிருக்கிறது.

மெயில்.

4. பொள்ளிக் காளிப் பாளையம் கூட்டுறவுக் கடன் சங்கம் மாசித் தலைவர், பதின்மூன்று உறுப்பினர்கள் கடன் கேட்டிருப்பதாகவும் அவர்களுக்குப் பட்டுவாடாச் செய்ய ரூ 2300 வேண்டுமென்றும் கள்ள ஆதாரவுகள் தயாரித்துக் கோயன்புத்தூர் பாங்கிலிருந்து கடன் வாங்கித் தான்மட்டும் சங்கத்திற்கு ஆதரவு எழுதி வைத்துவிட்டுப் பூராத் தொகையையும் எடுத்துக்கொண்டார். அவர் பேரில் நடவடிக்கை நடத்தியதில், அவருக்கு ஐந்து வருட கடின காவலும் ரூ 2500 அபராதமும் விதிக்கப் பட்டிருக்கிறது. அபராதம் வசூலானல், அதிலிருந்து ரூ 2000 பாங்கிக்குக் கொடுக்கப்படும். அபராதம் செலுத்தப்படாவிட்டால், அதற்காக 6 மாதம் சிறையிலிருக்க வேண்டும்.

மெயில்.

5. வேலூரில் மின்சார இறைவை யந்திரங்கள் தர (Supply) ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப் பட்டிருக்கிறது.

மெயில்.

(பதிவாளர் அந்தச் சங்கத் திறப்புக் கூட்டத்தில் பேசியபடி, ஏற்கனவே முக்கால்வாசி மாடுகளுக்கு வேலையில்லை. இறைவைக்கும் மாடுகள் வேண்டியதில்லை யென்றால், வேலையில்லாது இரை தின்றுகொண்டிருக்கும் மாடுகள் பின்னும் அதிகமேயாகும்.

இப்போதிருக்கிறபடி, உழவிற்கு மாடுகளில்லாமல் தீராது. இந்த உழவு மாடுகளுக்கு இறைவை வேலையு மில்லாமல் தீனிபோட்டுக் கொண்டிருப்பதில் சமுசாரிக்கு இலாபமிருக்கக் கூடுமா வென்பதையும் கவனிக்கவேண்டும். மாட்டின் சாணமும் கோமயமும் சத்தான இன்றியமையா உரங்களாகும். எண்ணெய் இயந்திரங்களை இறைவைக்கு உபயோகிப்பதால் இலாபமுண்டா வென்று ஒரு விபசாய நிபுணர் கணக்குப் பார்த்ததில் ஏழு கயலைத் தண்ணீர் பாயக்கூடிய நிலங்கள் சுற்றிலுமிருந்து அந்த நிலங்களில் எதேனும் சொற்பப் பாகந் தவிர மற்றவற்றிலெல்லாம் வருடம் பூராவும் பயிருமிருக்குமென்றால் சமுசாரிக்கு நட்டமிராதே யன்றி மற்றப்படி நட்டமுமேற்படும் என்ற முடிவிற்குச் சில வருடங்களுக்கு முன் வந்தனர். அந்த மாதிரியாக, மின்சாரம் சம்பந்தமாகவும் கணக்கிட்டுப் பார்த்து இலாபகரமாகத் தெரிந்தால் மட்டும் அப்பொழுதும் அந்த அளவிற்கே மின்சாரத்தை உபயோகிக்கலாம்.

தாவரங்கள் நமக்காகாதக் கரியிரு தீய தையைப் (Carbonic acid gas) பயன் படுத்தியும் மாடுகள் நமக்காகத் தானியத்தாள்கள் முதலியவற்றைத் தின்று அதன் கழிவையும் உரமாக உதவியும் வரும் இயற்கைச் செட்டமைப்பைக் கலைப்பதால், உலக வோட்டத்திற்குத் தீங்கு வாராதிருக்கக் கூடுமாவென்றும் நாமையுறுகிறோம். ப—ர்.)

6. ஆயிரம் பெயருக்கு மேலுள்ள கிராமங்களில் இப்பொழுது பள்ளிக்கூடமில்லாதிருப்பவற்றில் ஐந்து வருடங்களுக்குள் பள்ளிக்கூடங்கள் அமைத்துவிடுவதென்று திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

Report of the D. P. I. in H. E. H. Nizams Dominions.

---

## 12. அறிவுரைத் திரட்டு:

# அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள்

1. பருத்திமாரை எருவாக்கல்: அகோலா சருக்கார் பண்ணையில், பருத்தி கடைசி வெடிப்பு எடுத்து முடியவும் பருத்திமார்கள் பிடுங்கிவிடப்படுகின்றன. இது அனேகமாகச் சனவரி பிப்பிரவரி மாதங்களில் செய்யப்படுகிறது. அதன்பின் பருத்திமார்களைக் காயப் போட்டுப் பின் தீனி வெட்டியால் (Fodder cutter) சிறு சிறு துண்டுகளாக வெட்டப்படுகின்றன. இப்படியாக ஐம்பது டன் பருத்திமார்கள் ஒரு காலத்தில் வெட்டப்படுகின்றன. பழைய 12-ம் நெம். மெல்லி (Smelly) தீனி வெட்டியால், நாளொன்றுக்கு நாலாயிரம் இராத்தல் வெட்டலாம். தீனிவெட்டி கிடைக்கவில்லை யென்றால், மாரை இறுகியிருக்கும் வயல் தரையில் அல்லது அதற்கும் சிறந்த அந்த வருடக் களத்தில் 2 அடி கனத்துக்கு விரித்து அதன்மேல் பெரிய வண்டியில் ஒரு சோடி மாடும் கட்டிக் குறுக்கு மறுக்குமாய் விட்டு அந்த மாரையெல்லாம் பொடியாக்க வேண்டும். அப்படிப் பொடியாக்கியதை ஒரு கிணற்றுக்குச் சமீபமாக அல்லது கோடைக்காலத்திலும் தண்ணீர் எளிதாகக் கிடைக்கக்கூடிய தான இடத்தில் 6 முதல் 9 அங்குல ஆழக்குழிகள் தோண்டி அதில் ஒவ்வொரு அடி உயரமாக நாலு அடுக்குகளாக விரிக்கவேண்டும். ஒவ்வொரு அடுக்கையும் முதலாவதாகத் தண்ணீரைத் தெளித்து நன்றாக நனைத்து அதன் மேல் புதுச்சாணித் தண்ணீர் அல்லது கோமயத்தையும் சளம்பத் தெளிக்கவேண்டும். அதன்மேல் புழுங்கிய உரம் கொஞ்சமும் வண்டல் கொஞ்சமுமாகச் சிதறுவதனால், அது சீக்கிரமாக மக்கவும் செய்யும்; அது பிரயோசனமாகவும் இருக்கும். இப்படியாக, அடுக்கடுக்காக நாலு அடியும் உயர்ந்துவிடும். அதன்மேல் கோடைக்காலத்தில் அடிக்கடி தண்ணீரைத் தெளித்து அதனை ஈரிப்பாயும் வைத்து வரவேண்டும். இப்படியாக, பத்தடி அகலம் பத்தடி நீளத்திற்கோ அல்லது பத்தடி அகலம் இருபதடி நீளத்திற்கோ நிலம் அமைவதற்குத் தக்கபடி பருத்திமார்க்குவியலையும் அமைத்துக் கொள்ளவேண்டும். பருவ மழைக் காலத்தில் (Monsoon) இரண்டு தடவையேனும் குவியல் பூராவையும் திருப்பிப் போடவேண்டும். இந்த மாதிரி வெகு கவனமாகச் செய்துவந்தால், அது ஒன்பது மாதத்தில் நிலத்திற்குப் போடத் தக்க உரமுமாகும். நன்றாகத் தயார்செய்த பண்ணையெரு மாதிரியாக நல்ல உரமுமாகும். இப்படியாக, ஒரு டன் அல்லது $2\frac{1}{2}$ வண்டிப் பாரம் எருச்சேர்க்கக் கூலி உள்பட ரூ. 2-0-3 பைசா ஆகிறது; அதாவது வண்டிப்பாரம் 12 அணு 9 பைசா ஆகும். இதில் ஆரம்பம் முதல் ஒன்பது மாதம்வரை செலவாகும் கூலியே 10 அணுவிற்கு மேலாகும். சம்முசாரி தானே

செய்யும்போது, இந்தக் கூலியும் அவனுக்கே சேருகிறது.

Indian Farming :

2. மைசூரில் புன்செய்த்தானியத்தோடு பயறையும் விதைத்தல் சாதாரணம். நிலக்கடலை யையும் காணத்தையும், K-I கேப்பையையும் காணத்தையும், புகையிலையையும் காணத்தை யும், கேப்பையையும் எள்ளையும், K-I கேப் பையையும் M. A. II பருத்தியையும் கலந்து சாகுபடி செய்து பார்த்ததிலும் நல்ல விளை விருக்கவும் ஏக்கருக்கு 80 முதல் 100 ரூபா அதிகமாக மிச்சப்படவும் காண்கிறோம்; மற் றக் கலப்பு விதைப்பைக் காட்டிலும் கேப்பை யும் பருத்தியும் சேர்த்து விதைப்பதே மிகுந்த பலன் தரக்கூடுமென்று தெரிகிறது. பருத்தி யும் சீக்கிரம் விளையும் நிலக்கடலையும், கரிசற் காட்டிற்கு வெகு பொருத்தமாகக் காணப்படு கிறது. இர்வின்கால் பண்ணையில் வாழையும் அன்னாசியும் கலந்து சாகுபடி செய்து பார்க்க லாமென்றும் தோன்றுகிறது.

Indian Farming Vasudavamurthy B. Ag.

---

# ஆ. கிராமப் புனருத்தாரண தேச முன்னேற்றக் குறிப்புக்கள்

1. தமிழ் நாட்டில் அனேகமாக எல் லாப் பிரதேசங்களிலும் மழைபெய்து சுபிட்ச மாயிருக்கிறது; ஆனால், விளைபொருள்களுக்கு விற்பனையில்லாமலும், விலைகள் நிரம்பக்குறைந் தும் இருக்கிறது. அதனால் குடியானவனுக்கு விளைந்தும் இலாபமின்றிச் சங்கடமாயிருக் கிறது. கோயன்புத்தூர் சில்லாவில் புகையிலை யைக் கேட்பாரே இல்லாமலிருக்கிறது. வெல் லம் பொதி யொன்றுக்கு ஏழு ரூபா விலைக் குக் குறைந்துவிட்டபடியால் குடியானவன் பாடு திண்டாட்டமாயிருக்கிறது. கரும்பு விப சாயிகள் என்ன செய்வதென்று தெரியாது திகைக்கிறார்கள். கோயம்புத்தூருக்குச் சுற் றுப்பக்கத்திலுள்ள கரும்பு விபசாயிகள் ஐக் கிய முறையிலே ஒரு சருக்கரை செய்யும் ஆலை தாபிக்கப் பிரயத்தனம் செய்துகொண்டிருக் கின்றனர். இது போன்ற பெரிய வேலைகளைக் கூட்டுறவியக்கம் மூலம் செய்தகொண்டால் தான் சனங்களுக்கு நன்மையுண்டாகும்...... நம் குடியானவர்களின் ஏழ்மை நிலைமையை யும், அவர்களுக்குப் படிப்பில்லாததையும் யோசித்துக் கொஞ்சக் காலத்திற்காவது கவர் மெண்டார் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண் டியது அவசியம். வேண்டிய அளவுக்குச் சமாச் சாரம் தெரிந்தவர்களையும் அனுபோகசாலி களையும் நியமித்து அவர்களுக்கு வேண்டிய இடங்களில் எல்லாம் சம்பளங்கொடுத்து இயக் கத்தைச் சனங்களுக்கு எவ்வளவு உபயோக மாக்க முடியுமோ அவ்வளவு உபயோகமாக்க வேண்டியது அவசியம். அரசாங்கம் இப் பொ றுப்பை ஏற்றுக்கொண்டே தீரவேண்டும்.

தி. அ. இராமலிங்கஞ் செட்டியார்.

2. ஒரு விபசாயி தனது விபசாயத்தை விரு த்தி செய்ய வேண்டுமென்றால், அவனுடைய வாழ்க்கை நிலைமை உயரவேண்டும்; அவன் எழுதப்படிக்கக் கணக்குகள் பார்த்துக் கொள் ளத் தெரிந்திருக்க வேண்டும். அவனை வியா பார முறையிலும் பழக்குவிக்கவேண்டும்; அவன் தன் மகசூல்களைக் கூட்டுறவுச் சங்கங்க ளின் மூலம் விற்றுவரவேண்டும்; சுகாதார விதிகளை அவனும் அவன் மனைவியும் தெரிந்து அனுஷ்டித்து வரவேண்டும்; முடிவாக, அவன் தேசிய அதிகாரிகளுக்கு ஆதரவளித்தும் வரி களை மனதோடு செலுத்தியும் வரும்படியாக அரசியல் முறைகளும் அவனுக்கு விளக்கப் படவேண்டும்.

C. F. Strickland.

3. சில சீனவாலிபர்களும் பெண்களும் உசிதமான கிராமங்களில் முதியோர் கல்வி நிலயங்களேற் படுத்தியிருக்கின்றனர்; அங்கே, முதியோர்களுக்கு எழுதப்படிக்கக் கற்பிப்பதுடன் நல்ல விதைகளையும் கருவிகளையும் பயன் படுத்திக் காட்டுவதற்காக விபசாயப் பண்ணைகளும் அமைத்து நடத்திவருகின்றனர். விருத்தியான கோழியினங்களும் பன்றிகளும் மற்றும் மிருகங்களும் வளர்க்கப்படுகின்றன; விபசாயிகளுக்குக் குஞ்சுகளும் கன்றுகளும் கொடுக்கப்படுகின்றன; கூட்டுறவுச் சங்கங்களும் வேலை செய்கின்றன; சுகாதார விதிகளும் விளக்கப்படுகின்றன; குடிமை (Cityenship) தேசியக்கடமைகள் பற்றிச் சரியான கருத்துக்கள், ஆண்களுக்கும் பெண்களுக்கும் வாலிபர்களுக்கும் முதியோர்களுக்கும் பயன் படும் படியாகப் போதிக்கவும் படுகின்றன.

C. F. Strickland.

---

# இ. இலக்கிய இலக்கண அருங்கலைப் போதனை முறை ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

1. கட்டுரைக் கதைகளும் மாயா விநோதக் கதைகளும் உண்மைக்கு விரோதமானவையென்றும், அவற்றால் கல்வி சம்பந்தமான உபயோகம் ஒரு நிலை மட்டுமேதானிருக்கிறதென்றும் ஆசிரியர்கள் அறியவேண்டும். பயங்கரமான கொடூரமான மிருகங்களைப் பற்றிய கதைகளையும், குழந்தைகளுடைய அனுபவத்திற்கு எட்டாத இராட்சசக் கதைகளையும், பூதம் பிசாசு குட்டிச்சாத்தான் காட்டேரி இரத்தக்காளி முதலியன பற்றிய பயங்கரமான கதைகளையும், பொறாமை கொலை வஞ்சகம் சூது கோபம் மூர்க்கம் முதலிய குணங்களை விவரித்துத் திடுக்கிடச் செய்யும் கதைகளையும், சிறு பிள்ளைகளையும் குழந்தைகளையும் கொடூரமாக நடத்தும் சரித்திரங்களையும், குழந்தைகள் படிக்கக் கூடாது. அப்படிப் படித்தால், அவை கற்பனா சத்தியை மிதமிஞ்சியும் பலமாகவும் தாக்கி, தூக்கத்திலுங்கூட அவை கனவாகத் தோன்றி அவர்களை வாட்டி விடும். உணர்ச்சியை அதிகமாகக் கிளறிவிடும் புத்தகங்களையும், சிறுவர்கள் அதிகமாகப் படிக்கக் கூடாது. சிறுவர்களுடைய அனுபவத்திற்கு எட்டாத நிலைமைகளையும் சம்பவங்களையும் உணர்ச்சிகளையும் வெகு விரிவாக எடுத்துக் கூறும் புத்தகங்கள் அவர்களுடைய உற்சாகத்தையும் கெடுத்து விடும். புத்தகங்கள், படிக்கும்போதே மனத்தைக் கவரக்கூடிய சித்திரச் சொற்கள் அமைந்தனவாகவும், இயற்கை வனப்பை வேண்டிய அளவில் அடக்கியுள்ளனவாகவும் இருக்க வேண்டும்.

உண்மையான கல்வி சமூகக் கல்வியே. பரோபகாரச் சிந்தையே சிலாக்கியம். சமூகத் தொண்டு மனஞ்சலியாது உண்மையாகச் செய்ய வேண்டுமென்றால், நல்லுணர்வும் நற்சிந்தையும் அநுதாபமும் வேண்டும். இவற்றிற்குக் கற்பனா சத்தியே தகுந்த உதவியளிக்கும். ஆகையால், ஆசிரியர்கள் தங்களிடம் வரும் மாணவர்களின் கற்பனைத்திறனை விருத்தியாக்கப் பல வழியிலும் முயல வேண்டும்.

பாலர் கல்வி.

2. கடந்த இருபது ஆண்டுகளில் ஏற்பட்ட மாறுதல்களை நோக்கின், ஆசிரியர்கள் தங்களுடைய உரிமைகளைப் பற்றி ஒரு சாசனம் அரசாங்கத்தாரிடமிருந்து பெறுவது அவசியம் என்று எனக்குத் தோன்றுகிறது. வேலை சாசுவதமாக இருக்க வேண்டுமென்றும் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய சம்பளம் பெற வேண்டுமென்றும், அனாவசியமாக எவரும் தங்களுடைய வேலையில் தலையிடக்கூடாதென்றும், வேலை நீக்கம் தண்டனை முதலியனற்

திற்காக அப்பீல்செய்து கொள்ள ஒரு போர்டு வேண்டுமென்றும் ஆசிரியர்கள் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ள வேண்டும்..................

ஆசிரியர் தொழில் மிகவும் உத்தமமானதென்பதில் சந்தேகமில்லை; ஆனால், நமக்குள்ளே அத்தொழிலின் பெருமையையும் உத்தம குணத்தையும் பற்றிப் பேசிக்கொள்ளுவதிற் பயனில்லை; தொழில் உத்தமமானதென்றால், அதைப் பிறர் மதிக்கவேண்டும். ஆசிரியர்கள் தங்கள் தொழில்முறையில் முன்னேறவேண்டும். உயர்ந்த இலட்சியங்களுடன் தொண்டாற்ற வேண்டும். எந்த ஆசிரியராவது இத்தொழிலின் மேன்மையைக் குலைக்குமாறு நடந்துகொண்டால், அதைத் தைரியமாகக் கண்டிக்கவேண்டும். தன்னிடம் கல்வி பெறும் மாணாக்கர்களுக்கன்றி, பொதுசனங்களுக்கும் வழிகாட்டியும் குருவும் தோழனுமாக இருந்து சமூகத்தின் நன்மைக்கு உழைத்துவரவேண்டும்................

இக்காலத்தில், கல்வி கற்பதென்றால் அனாவசியமான அதிகச் செலவுகள் பல ஏற்படுகின்றன. சம்பளம் அதிகமாக இல்லாவிட்டாலும், புத்தகங்கள் குறிப்புப் புத்தகங்கள் முதலியவற்றினால் ஏழைப் பிள்ளைகளுக்கு அதிகச் சிரமமுண்டாகிறது. இவ்விதச் செலவுகளைக் குறைப்பதற்கு ஆசிரியர்கள் வழிதேட வேண்டும்.

பண்டிதர் இலட்சுமணசாமி முதலியார்

---

## ௯. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

1. சூரியன், ஒளிகளுக்கெல்லாம் ஒளி; கண்ணுக்குப் பார்வை; கருத்திற்குக் கவிதை; உள்ளத்திற்கு விருந்து; உயிருக்கு வேர்.—சூரியன் இருளைக்கலக்கி, ஒளி கொணர்வான்; கடலைக் குடித்து, மழை பொழிவான்; பருவங்களின் விதியைப் படைத்திடுவான்; வானத் திரையிலே, வர்ணம் தீட்டுவான்; வையத்து மலர்களைச் சிரிக்கப்பண்ணுவான். பூமியின் பொன்னுடலைப் பச்சைப்போர்வையால் போர்த்திடுவான்.—பயிர்கள் வளர்வதும், நதிகள் பாய்வதும், காற்று வீசுவதும், கனல் சுடுவதும், தசைகள் திரள்வதும், நரம்புகள் முறுக்கேறுவதும், இரத்தம் ஓடுவதும், உயிர் மலர்வதும் அவனாலேயே.

நிலக்கரி அவனது ஒளிக்கட்டி; மண்ணெண்ணெய்யும் பெட்ரோலும் அவனது ஒளியூற்றுக்கள். பொன்னும், மணியும், வைரமும் பூதேவிக்கு அவன் கொடுத்த சீதனச் செல்வம். இரும்பு அவனது தொழிற்சாலையிலே அமுக்கப்பட்ட இருள் துண்டு; மின்சாரம் அவனது மின்னல் வாள். பூமி உடல், சூரியன் உயிர். ஆகாயத்திலே ஆயிர மாயிர மைல்களுக்கு அப்பாலுள்ள சூரிய வொளி அவிந்து போனால் ஒரு மாதத்திற்குள் பூமி உயிரற்ற ஒரு பனிக்கட்டி யுருண்டையாய் ஒடுங்கிவிடும்.

அனுமான்.

II வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்.

பிள்ளைகள் பெற்றதப் பூனை—அவை
பேருக் கொரு நிறமாகும்.

சாம்பல் நிறமொரு குட்டி—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி.
பாம்பு நிறமொரு குட்டி—வெள்ளைப்
பாலினிற மொரு குட்டி.
எந்த நிறமிருந்தாலும்—அவை
யாவும் ஒரே தரமன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும்—இஃது
ஏற்ற மென்றுஞ் சொல்லலாமோ?
வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை.
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்—இங்கு
யாவர்க்கு மொன்றெனல் காணீர்.''

*பாரதியார்.*

III 1. குடியானவனோ, முடியானவனோ?
2. குடித்தனமே, துரைத்தனம்.
3. குடி உயர, முடி உயரும்.
4. ஏர் நடந்தால், பேர் நடக்கும்.
5. ஏரையிகழ்ந்தார், பேரையிழந்தார்.
6. உப்பிட்டவரை, உள்ளளவும் நினை.
7. ஒரு காசு பேணின், இரு காசு தேறும்.
8. ஒடிந்த கோலானாலும், ஊன்று கோலாகும்.
9. ஒருமைப் பாடில்லாதகுடி, ஒருமிக்கக் கெடும்.
10. ஒரு குடம் பாலுக்கு, ஒரு துளி பிரை.

IV 1. தன்னறியாமையை அறியாதவனே மடையன்; அதனை யுணர்ந்து அகம்பாவத்தை வெல்லுபவனே ஞானி.
2. மடையனை அகம்பாவம் வெல்லுகிறது; அகம்பாவத்தை ஞானி வெல்லுகிறான்.
3. மடையன் தன் குற்றங் குறைகளுக்கும் பிறரைக் குறைகூறுகிறான்; புத்திசாலியோ தன்னையே குறை கூறிக்கொள்ளுவான்.
4. மடையன் பிறரைக் குறைகூறி, தான்செய்வது சரியெனச் சாதிக்கிறான்; ஞானியாகிக் கொண்டிருக்கிறவனோ, தன்னைக் குறைகூறிப் பிறர் செய்வது சரியாயிருக்கலா மென்கிறான்.
5. பிறரைக் குறைகூறுவதால் அல்ல; தன்னைத் தான் திருத்துவதாலேயே ஒருவன் சுத்த மாகக்கூடும்.
6. தன்னை வென்றவனே, பிறரையடக்கி யாள முடியும்; அப்படியாளுவதும் அகம்பாவத் தாலல்ல, அன்பினாலேயே சாத்தியமாகும்.

7. உண்மையை அறிய விரும்புபவன், முதலாவதாகத் தன்னையறியவேண்டும்; தன்னையறிந்தவனே தன் குறைகளைக் களையமுடியும்; தன் குறைகளைக் களைந்து நிறைவுற்றவனே குணத்தை, உண்மையைச் சரியாக அறியமுடியும்.

James Allen.

# ஏழை இந்தியா

உலகம் தோன்றிய காலமிருந்து இற்றைக்குச் சற்றேறக் குறைய இருநூறு ஆண்டுகட்கு முன்புவரை நமது இந்தியா உலகத்திலுள்ள மக்களுக்கே ஒரு 'தானியப் பொக்கிசம்' எனவும், அத்தானியங்களில் தலைசிறந்த நெற்சாகுபடி இங்கு அபரிமிதமாக நடைபெற்று எல்லா நாடுகளுக்குமே சென்று சிறப்பளித்து வந்ததால் இந்தியா உலகிற்கொரு 'நெற்களஞ்சியம்' எனவும், அந்நெல் முதலிய தானியங்களின் வியாபாரப் பெருக்கால், பெருகி வந்த செல்வம் பொங்கிமிகுகின்ற செருக்கால் இந்தியா உலகுக்கொரு 'பொற்களஞ்சியம்' எனவும், அவனியனைத்தும் போற்றி வந்திருப்பதை யாவரும் அறிவார்கள். அத்தகைப் பெருமை வாய்ந்த நமதுஇந்திய தேசம் இப்போழ்து எத்தகை வறுமையில் இருந்துழல்கின்றதென்பதற்கு யாம் முதலில் எழுதியுள்ள "ஏழை இந்தியா" என்ற தலையங்கப் பெயரே ஏற்ற பெற்றியில் விளக்குமென்பதை எளிதில் உணரலாம்.

பல குடிகள் சேர்ந்து வசித்தற்கிடமாயது ஒரு கிராமம்; பல கிராமங்கள் சேர்ந்து அமைதற்கிடமாயது ஒரு நாடு; பல நாடுகள் சேர்ந்து அமைதற்கிடமாயது ஒரு நகரம்; பல நகரங்கள் சேர்ந்து அமைதற்கிடமாயது ஒரு சில்லா; பல சில்லாக்கள் சேர்ந்து அமைதற்கிடமாயது ஒரு மாகாணம்; பல மாகாணங்கள் சேர்ந்து அமைதற்கிடமாயது ஒரு ராசாங்கம். ஆகவே ராசாங்கம் செம்மையில் நடைபெறுதற்கு மூலகாரணமாய் இருந்து துலங்குவது பல குடிகள் சேர்ந்து வசித்தற்கிடமாகிய கிராமம் என்றும் அக்கிராமத்திலுள்ள குடிமக்களில் பெரும்பாலோர் விவசாயத் தொழிலிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து அதனைக் காப்பாற்றி வந்துள்ளார் என்றும் தெள்ளிதில் விளங்கவே நமது வள்ளுவனாரும் "உழுவார் உலகத்தார்க் காணி அஃதாற்றா தெழுவாரை எல்லாம் பொறுத்து" என்று ஒரு மலையினது பெரிய உருவத்தை அப்படியே ஒரு சிறு பனியினது துளி பிரதிபலித்துக் காட்டுமா போன்று தமது சிறிய குறளடிக்குள் விரிய விளக்கிக் காட்டியிருக்கின்றனர்.

அந்தக் காலத்தில் நாம் விளைவிக்கிற உணவுப் பொருள்கள் நமது தேச முப்பத்து முக்கோடி சனங்களுக்கும் போதுமான அளவில் பெருகிப் பிறநாட்டார்க்கும் அவர் வயிறார உண்டு உடுத்துக் களித்திருக்குமாறு உதவியும் வந்தன. இந்தக் காலத்தில் இவ்வளவு நீர்வளமும் நிலவளமும் பொருந்திய நமது நாடு நம் தேச மக்களுக்கேனும் அவர்களில் நான்கில் ஒரு மடங்குள்ள மக்களுக்கேனும் போதியபடி வயிறார உணவு கிடைப்பதற் கிடனில்லாது போயிற்றே என்பதை எண்ணுங்கால் ஏங்காதிருப்பதற் கிடனில்லையன்றோ? இப்போது நடந்துவரும் நமது பயிர்த்தொழிலைப் பிறநாட்டுப் பயிர்த்தொழிலுடன் ஒப்பிட்டு நோக்க வெட்கமடைவதன்றி வீறுப்படைய முடியாதென்றுதான் விளம்புதல் வேண்டும். இதற்குக் காரணம் கிராமத்தார்களது விவசாய அபிவிருத்தியின் ஊக்கக் குறைவும், அவ்விவசாய விருத்தியைக் கொண்டே உண்டு உடுத்துக் கண்டு களித்து வரும் நகரத்தார்கள் கிராமங்களை மதித்து விவசாயிகளை யணைத்து அவர்களை ஊக்கி உதவி புரிவதில் சிரத்தையற்றுப்

போன குறைவுமேயன்றி வேறுவிதமாய் நீர் நிலவளமேதேனுங் குறைந்து விட்டதென்று சமாதானம் கூறுதற் கிடனில்லை.

தொல்காப்பியம் முதல் பழய சங்ககாலத்திலுள்ள ஆயிரக்கணக்கான புலவர்களும் கம்பர் வள்ளுவர் சேக்கிழார் புகழேந்தி ஒட்டக்கூத்தர் அதிவீரராம பாண்டியர் முதலிய பல காவிய கர்த்தாக்களும் முதலில் நாட்டு வருணனை நகர வருணனை முதலிய வளங்களைக் கூறியே தமது நூலைத் துவங்குகின்றனரென்றால் அவர்களது நாட்டுப் பற்றுதான் என்னே! அங்ஙனமிருந்தும் நாம் நமது நாட்டுப் பற்றிலும் கிராமப் பற்றிலும் அவற்றில் முக்கியமான விபசாயப் பற்றிலும் கவனஞ்செலுத்தாமல் பெறப்போகும் வாழ்வு தான் என்னே! இனியேனும் நாம் கிராம விபசாயத் துறைகளில் முழுமனத்துடன் கவனஞ்செலுத்தி முன்னர் போல் முன்னுற முன்வரவேண்டுமென்று இவ்வியாசத்தின் மூலம் வினயமாய்க் கேட்டுக்கொள்கின்றேம்.

இங்ஙனம்

ஓர் ஏழை இந்தியவாசி.

## கால்நடைச் சந்தைகளும் விபசாயக் கண்காட்சிகளும்

திரிசிராப்பள்ளி சில்லா கரூர் தாலுகா உப்பிடமங்கலத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் பாமதியிலும் முசிரித்தாலுகா தொட்டியத்திலும் செவ்வாய்க் கிழமை தோறும் குளித்தலைத் தாலுகா மணப்பாறையில் புதன் கிழமை தோறும் கால்நடைச் சந்தைகள் நடைபெற்று வருகின்றன. கோயன்புத்தூர் தாலுகா துடியலூரில் திங்கட்கிழமை தோறும் கோபிச்செட்டி பாளையம் தாலுகா புளியம்பட்டியிலும் பொள்ளாச்சியிலும் வியாழக்கிழமை தோறும் கால்நடைச் சந்தைகள் நடைபெற்று வருகின்றன. அவிநாசியில் ஏப்பிரல்மீ நடை பெறும்.

செஞ்சித் தாலுகா மேலமலயனூரில் மார்ச்சுமீ இரண்டாம் வாரத்திலும் திண்டிவனம் தாலுகா மயிலத்தில் மார்ச்சுமீ மூன்றும் வாரத்திலும் திருக்கோவிலூர் தாலுகா பரிக்காலில் மார்ச்சுமீ முதல் மூன்று மாதமும் கால்நடைச் சந்தை நடைபெறும்.

நிலக்கோட்டையிலும் அத்திக்கோம்பையிலும் மார்ச்சுமீ மூன்றும் வாரத்திலும் திருப்பரங்குன்றத்தில் மார்ச்சுமீ நான்காம் வாரத்திலும் மதுரையில் மார்ச்சு ஏப்பிரல் மாதங்களிலும் இடையகோட்டையில் ஏப்பிரல்மீ முதல் வாரத்திலும் கால்நடைச் சந்தைகள் நடை பெறும்.

கழுகுமலையில் பங்குனி உத்திரத்தையடுத்து மார்ச்சுமீ பின் பதினைந்து நாட்களிலும் ஏப்பிரல்மீ முன் பதினைந்து நாட்களிலும் கால்நடைச் சந்தை நடைபெறும்.



## 1941-௵ மார்ச்சு—ஏப்பிரல்௴

விக்கிரம-௵ — மாசி—பங்குனி௴ — கொல்லம் 1116-௵

### திதி, நட்சத்திரம், தியாச்சியம் முதலியவை.

| இ. | த. | கிழ. | |
|---|---|---|---|
| மார்ச்சு௴ 1 | மாசி-௴ 18 | சனி | திரு-20-8, ரேவ-52-27, திவி-19-23, சதுர்த்தி. |
| 2 | 19 | ஞா | சது-25-13 அசு-58-54, ரா-18-13. |
| 3 | 20 | திங் | பஞ்-30-26, பர-60-0, திவி-25-24. |
| 4 | 21 | செ | சட்-35-7, பர-5-10, ரா-8-25, ✳ கார்த்திகை, சட்டி. |
| 5 | 22 | புத | சப்-39-28, கார்-10-58, ரா-24-33. |
| 6 | 23 | வியா | அட்-42-37, உரோ-15-51, ரா-1-3. |
| 7 | 24 | வெ | நவ-44-36, மிருக-19-41, ரா-1-27. |
| 8 | 25 | சனி | தச-45-17, திருவா-22-19, ரா-23-16. |
| 9 | 26 | ஞா | ஏகா-44-38, புனர்-23-41, ரா-13-59, ஏகாதசி. |
| 10 | 27 | திங் | துவா 42-48, பூச-23-51, ரா-25-35. |
| 11 | 28 | செ | திரயோ-39-52, ஆயி-22-54, ரா-22-10, பிரதோடம். |
| 12 | 29 | புத | சதுர்-36-0, மக-20-59, ரா-10-17, நித்திய சிவராத்திரி. |
| 13 | 30 | வியா | பௌ-31-24, பூர-18-18, ரா-5-29, ◯ பௌர்ணமி. சந்திர கிரகணம் இந்து விடுமுறை. |
| 14 | பங்குனி-௴ 1 | வெ | பிர-26-12, உத்தி-14-58, ரா-5-44. |
| 15 | 2 | சனி | துதி-20-31, அத்-11-11, திவி-29-49. |
| 16 | 3 | ஞா | திரு-14-37, சித்-7-6, திவி-20-8. |
| 17 | 4 | திங் | சது-8-41, சுவா-2-59, விசா-56-1, திவி-16-3. |
| 18 | 5 | செ | பஞ்-2-55, சட்டி-54-37, அனு-55-28, திவி-5-56. |
| 19 | 6 | புத | சப்-52-43, கேட்-52-26, திவி- 8-46, கரிநாள். |
| 20 | 7 | வியா | அஷ்-48-38, மூல-50-5, திவி-11-39. |
| 21 | 8 | வெ | நவ-45-39, பூரா-48-40, திவி-13-31. |
| 22 | 9 | சனி | தச-43-22, உத்தி-48-18, திவி-8-33, ரா-28-25. கடைசிச் சனிக்கு முந்தின சனி விடுமுறை. |
| 23 | 10 | ஞா | ஏகா 42-29, திருவோ-49-8, சேடம்-2-11, ரா-29-26, ஏகாதசி. |
| 24 | 11 | திங் | துவா-42-54, அவிட்-51-11, சேடம்-3-13. |
| 25 | 12 | செ | திரயோ-44-27, சத-54-30, திவி-10-11, பிரதோடம். |
| 26 | 13 | புத | சதுர்-47-16, பூரட்-58 56, திவி-11-41, நித்திய சிவராத்திரி. |
| 27 | 14 | வியா | அமா-51-14, உத்திரட்-60-0, திவி-25-6, ● அமாவாசை. |
| 28 | 15 | வெ | பிர-55-48, உத்-4-21, ரா-7-19, கரிநாள், தெலுங்கு வருடப்பிறப்பு விடுமுறை. |
| 29 | 16 | சனி | துதி-60-0, ரேவ-10-31. |
| 30 | 17 | ஞா | துதி-0-53, அசு-16-54, திவி-5-49, ரா-13-16, மாத சிவராத்திரி. |
| 31 | 18 | திங் | திரு-5-57, பர-23-12 ரா-26-0, சதுர்த்தி ✳ கார்த்திகை. |
| ஏப்பிரல்௴ 1 | 19 | செ | சது-10-39, கார்-29-4, கரிநாள். |
| 2 | 20 | புத | பஞ்-14-40, உரோ-34-14, திவி-12-31, ரா-18-59, சட்டி. |
| 3 | 21 | வியா | சட்டி-17-40, மிருக-38-20, ரா-19-40. |
| 4 | 22 | வெ | சப்-19-28, திருவா-41-17. |
| 5 | 23 | சனி | அட்-20-1, புனர்-42-58, திவி-12-7. |
| 6 | 24 | ஞா | நவ-19-11, பூச-43-23, திவி- 3-7. |
| 7 | 25 | திங் | தச-17-19, ஆயி-42-43, திவி-15-1. |

Regd. No. M. 4126.

அன்புநிலை
தேடும் பருவமிது கண்டீர் ; சேரவாரும், சேகத்தீரே.—தாயுமானவர்.

# "கிராமதூதன்."

## ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

கிராம முன்னேற்றமே, தேச முன்னேற்றமாகும். கிராம முன்னேற்றத்திற்கும் நகரவாசிகள் சுகவாழ்விற்கும் அவசியமான விபசாயம், கூட்டுறவு, கைத்தொழில், குடிசைத்தொழில், கல்வி, சுகாதாரம், குடும்பவாழ்க்கை பற்றிய பல நல்லுரைகளும், கதைகளும், மற்றும் கிராமவாசிகள், விபசாயிகளுக்குப் பிரயோசனமான செய்திகளும், அறிவுரைகளும், பஞ்சாங்கம் முதலியனவும் பிரதி அங்கிலமாதம் முதல் ஐந்து தெய்திக்குள் இந்தப் பத்திரிகையில் வெளிவரும். இதைப் படித்து, இதில் காணும் நலங்களைப் பிறர்க்குச் சொல்லுங்கள். சந்தேகம் தோன்றினல், குறை ஏதும் கண்டால் பத்திராதிபருக் கெழுதுங்கள்.

அங்கிலம் கற்றிராதார்க்கும் கற்றிருந்தும் போதிய சாவகாசமில்லாதார்க்கும் பெரிதும் பயன்படுமாறு, சிறந்த அங்கில நூல்கள், பத்திரிகைகள் அறிக்கைகளின் சாரமும், கட்டுரையாகவும் அறிவுரையாகவும் செய்திகளாகவும் இப்பத்திரிகையில் எழுதிவரப்படுகிறது.

இந்தப் பத்திரிகைக்கான கட்டுரைகள், மாற்றுப்பத்திரிகைகள், விமர்சனப் புத்தகங்கள் பத்திராதிபருக்கும் சந்தா பிரசுரகர்த்தாவிற்கும் அனுப்பப்படவேண்டும். பத்திரிகை ஏசன்சிக்கும் நீடித்தகால விளம்பரவிகிதங்களுக்கும் பிரசுரகர்த்தாவிற்கே யெழுதவேண்டும்.

வி. பி. தபாலினல், சந்தாதாருக்கு அனவசியமாகத் தபாற்செலவு அதிகமாவதால், இந்தப் பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை. சந்தா முன் பணமாகச் செலுத்தியிருக்கும் காலம்வரைக்கே பத்திரிகை யனுப்பிவரப்படும்.

பத்திராதிபர்.
இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை,
சிவில்லிபுத்தூர்.

பிரசுரகர்த்தர்.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டு வருடச்சந்தா | ... | ரூ | 1—0—0 |
| வெளி „ | ... | ரூ | 2—0—0 |
| தனிப் பிரதி விலை | ... | ரூ | 0—1—6 |

| | | |
|---|---|---|
| ஒரு பக்கம் விளம்பரம் ஒரு தடவை | | 10—0—0 |
| அரைப்பக்கம் | „ | 6—0—0 |
| கால்பக்கம் | „ | 3—0—0 |

முதல் மலர் (1939ம் ஹூத்திய 12 இதழ்கள்) இரண்டாவது மலர் (1940ம் ஹூத்திய 12 இதழ்கள்) பைண்டு செய்து சில பிரதிகளேயிருக்கின்றன. தனித்தனி விலை ரூ. 1—4—0

ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி

ஆசானில்லாமல் ஆங்கிலங் கற்றுக்கொள்ளும் புத்தகம் இதுதான். இதில் இங்கிலீஷ் வார்த்தைகளை உச்சரிக்கும் விதமும், அவற்றின் அர்த்தங்களும் தெளிவாகவும், எவரும் எளிதில் அறிந்துகொள்ளும் விதமாகவும் தமிழ் உச்சரிப்புடன் விளக்கப்பட்டிருக்கின்றன. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு நான்கு பாஷைகளும் தனித்தனி

புக் 1-க்கு விலை ரூ. 2.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன், புத்தக வியாபாரம், ஸ்ரீ கோபால் மஹால், மதுரை.

Printed at the Excelsior Power Press, North Chitrai St. Madura:-41.